விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
சங்குநாதம்

சங்கு 25
ஒலி 026 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 29 ஞாயிற்றுக்கிழமை (14.01.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### 1700 வைத்தியர்கள், 900 விரிவுரையாளர்கள்

## கடும் பொருளாதார நெருக்கடியால் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர்

### கல்வி, மருத்துவத்துறையில் பாரிய சிக்கல்

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த ஆண்டு 1,700க்கும் மேற்பட்ட வைத்தியர்கள் மற்றும் 900 பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நடவடிக்கையானது இலங்கையின் மருத்துவத் துறையினையும் பல்கலைக் கழகங்களின் கல்வி நடவடிக்கையினையும் பெரும் நெருக்கடிக் 19

## ரணில் அரசாங்கத்தின் ‘யுக்திய’ நடவடிக்கை

### ஐ.நா மனித உரிமை ஆணையாளர் கவலை



(ஜெனிவா)

**இலங்கை எதிர்கொண்டுள்ள போதைப்பொருள் பிரச்சினைக்கு எதிராக ரணில் அரசு மேற்கொண்டுவரும் யுக்திய நடவடிக்கை குறித்து ஐ.நா மனித உரிமை ஆணையாளர் வோல்க்கர் டேர்க் கவலை வெளியிட்டுள்ளார்.**

இலங்கை எதிர்கொள்ளும் போதைப் பொருள் பிரச்சினைக்கு எதிராக அதிகாரிகள் பாதுகாப்பினை அடிப்படையாக கொண்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் கவலை வெளியிட்டுள்ளது. 19

### இலங்கையின் வயதான நபர் காலமானார்



19

### பால் பைக்கற், யோகட் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

பால் பைக்கற் மற்றும் யோகட் ஆகியவற்றின் விலைகள் அதிகரித்துள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபை 19

## யுக்திய சுற்றிவளைப்புக்களை இன்று முதல் தீவிரப்படுத்துக

### பதில் பொலிஸ்மா அதிபர் அறிவுறுத்தல்



(கொழும்பு)

யுக்திய சுற்றிவளைப்பில் இன்று முதல் தீவிரமாக இணையுமாறு பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனினால் உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து பிராந்தியங்களுக்கும் 19

## வெற்றிலைக்கேணியில் மோ.சைக்கிள் விபத்து

### அபிவிருத்தி உத்தியோகத்தர் மரணம்



(கரணவாய்)

வடமராட்சிக் கிழக்கு வெற்றிலைக் கேணியில் இடம்பெற்ற கோர விபத்தில் அபிவிருத்தி உத்தி 19

## வடமராட்சியில் கரையொதுங்கிய மர்மப் பொருளால் பதற்றம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி - கிழக்கு, உடுத்துறை பகுதியில் மீண்டும் ஒரு மர்மப் பொருள் கரையொதுங்கியுள்ளதால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.

அண்மைக்காலமாக, வடமராட்சிக் கிழக்கின்



19

### அரச நிறுவனங்களுக்கு வாகனங்கள் இறக்குமதி

(கொழும்பு)

பல அரச நிறுவனங்கள் அத்தியாவசிய தேவைகளுக்காக குறைந்த எண்ணிக்கையிலான வாகனங்களை இறக்குமதி செய்யநடவடிக்கை எடுத்துள்ளன. 19

## பருத்தித்துறையில் டெங்கால் பாதிக்கப்பட்ட மாணவி

### அம்புலன்ஸில் அழைத்துச் செல்லப்பட்டு உ/த பரீட்சையில் தோற்ற அனுமதி

(பருத்தித்துறை)

பருத்தித்துறையில் டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ள மாணவி ஒருவர் அவசர நோயாளர் வாகனமூடாக பரீட்சை நிலையத்துக்கு அழைத்து செல்லப்பட்டு பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த விடயம் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைக்கு

கடை, மாடி வீடு, விசாலமான களஞ்சிய அறை, அரிசி ஆலை அமைப்பதற்கான இட வசதி ஆகியன வாடகைக்கு உள்ளது. அமைவிடம் வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு முன்பாக உள்ளது.
இருப்பிடம்
யாழ்ப்பாணம் - மானிப்பாய் - காரைநகர் வீதி - சுளிபுரம்

**077 336 6485**

(C-8132)

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் சுப்பர்மார்க்கட்டுக்கு வேலையாட்கள் தேவை.
காசாளர் - கணினி தெரிந்தவர்கள் (இருபாலாரும்)
தொடர்பு : 077 355 1631
T.T.R.Supermarket
85, 87, Rakka Road, Jaffna.

(18627)

## தேவை

தனியார் கம்பனி ஒன்றிற்கு தகுதியான ஆண் அல்லது பெண் செயலாளர் தேவை. ஆங்கிலம், தமிழ் எழுதுதல், வாசித்தல், பேசுதல் தகைமையுடன் கணனி அறிவும் விரும்பத்தக்கது. தகுதியான சம்பளம் வழங்கப்படும்.

(18624)

**077 298 7583**

## பதவிவெற்றிடங்கள்

யாழ். நகரில் அமைந்துள்ள தனியார் நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.

- **கணக்கு இலிகிதர்** ( கணக்கியல் துறையில் அனுபவமுடைய 25 – 35 வயதிற்குட்பட்டவர்கள் )
  Accounantant ஆண் / பெண்
- **பொதி செய்பவர் / பொதி சுமப்பவர்** ( 25 – 35 வயதிற்குட்பட்டவர்கள் )
- **காவலாளி** ( 25 – 45 வயதிற்குட்பட்டவர்கள் )

கீழ் காணும் முகவரிக்கு சுயவிபரங்களை அனுப்பி வைக்கவும்

**வ.வ.இராமசாமிப்பிள்ளை & சன்ஸ்**
இல. 58, குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

**021 222 4766, 021 222 6806**

(18554)

## கூறுவிலை கூறப்படுகின்றது

றக்கா வீதியில் அமைந்துள்ள கடைத் தொகுதியும் அதனுடன் அமைந்த வீடும் முற்றாக அகற்றுவதற்கான கூறுவிலை கூறப்படுகின்றது.

**071 034 7308**
**077 913 4325**

(18625)

## வாடகைக்கு Room தேவை

A/L படிக்கும் மாணவருக்கும், தாய்க்கும் Room வாடகைக்குத் தேவை. (அமைதியான சூழல் விரும்பத்தக்கது.)

(18615)

**077 839 9382**

## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள மரத் தளபாடங்கள், இலத்திரனியல் உபகரணங்கள், ஒரிஜினல் சணல், மறி பால் ஆடு, இரும்பு நாய்க்கூடு என்பன விற்பனைக்கு.

(18620)

**076 830 7424**

## விற்பனையாளர்கள் தேவை

எமது ஜவுளி நிறுவனத்திற்கு தொழில் பழகிய அல்லது பழக ஆர்வம் உள்ள ஆண், பெண் விற்பனையாளர்கள் தேவை. மதிய உணவுடன் கூடிய சம்பளம்
நேரில் வரவும்
**சென்னை பெசன் வேல்ட்**
இல. 63, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

(18628)

## வேலையாள் தேவை

யாழ். நகரில் உள்ள கடை ஒன்றிற்கு 18 – 30 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் தேவை.

(18623)

**021 221 7600**
**075 988 1000**
**077 937 0000**

## மரண அறிவித்தல்



### கதிரவேலு புஸ்பராணி

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு புஸ்பராணி அவர்கள் நேற்று (13.01.2024) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தி - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் க.கதிரவேலு (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் பாசமிகு மனைவியும் கந்தசாமி, சுப்பிரமணியம், சந்திரசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் நந்தா அமிர்தேஸ், தாட்சாயினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் கமநல சேவைத் திணைக்களம் - வவுனியா), கிருஸ்ணவேணன் (மஹா மல்ரி சொப் உரிமையாளர் - கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வசந்தரூபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - வவுனியா), நிலாஜினி, கஸ்தூரி (ஆசிரியர் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் தரணிஸ், டிகர்ஷா, கிருஸ்ணவி, லிவிஸ்ணவி, ஆதினி, தஸ்வி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.01.2024) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
077 230 9979 (ஊ) குடும்பத்தினர்

உ
சிவமயம்



ஏழாலை தெற்கு வசந்தபுரம்
களபாவோடை அருள்மிகு

### ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம் மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2024

நிகழும் மங்களகரமான சோபகிரு வருடம் 2ம் நாள் (16.01.2024) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு கொடியேற்றம் இடம் பெற்று பூர்த்தி தினமாகிய 25.01.2024 வியாழக்கிழமை ஸ்ரீ வசந்த நாகபூசணி தீர்த்தத் தடாகத்தில் தீர்த்தம் இடம்பெறும்.

**தினசரி காலை 9.00 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகும்**

**விசேட உற்சவ தினங்கள்**

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 16.01.2024 | செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி |
| வேட்டைத்திருவிழா | 22.01.2024 | திங்கட்கிழமை காலை 9.00 மணி |
| சப்பறத்திருவிழா | 23.01.2024 | செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி |
| தேர்த்திருவிழா | 24.01.2024 | புதன்கிழமை காலை 9.00 மணி |
| தீர்த்தத்திருவிழா | 25.01.2024 | வியாழக்கிழமை காலை 9.00 மணி |

அருள்மிகு ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்பாள்
தேவஸ்தானம்.

(18602)



## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்
### பொன்னுச்சாமி நந்தகுமார்
( சுன்னாகம் )
"நந்தன் கோப்பி அன் கூல்பார் உரிமையாளர்"
மண்ணில் : 26.04.1968
விண்ணில் : 26.12.2023

ஈர் ஆறு மாதங்கள் சென்றதோ ஆனால் ஈரவிழிகள் காயவில்லை
இரு கண்களால் கண்ணீர் ஆறாக பாயுது கணவர் என்ற சொல்லும்
அப்பா என்ற ஆருயுயிர் சொல்லும் அண்ணா, தம்பி என்ற
அருமைச் சொல்லும் தாய் மாமன் என்ற சொல்லும் அத்தான்,
மச்சான், சித்தப்பா என்ற சொல்லும் நந்தன் நந்தண்ணா என்ற
சொல்லும் உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள்,
O/L குறூப் மாணவர்கள் நந்தன் டே என்ற சொல்லுக்கும்
இடம் கொடுக்காமலும் மரியாதை செலுத்தாமல் போனீரோ!
என்ன செய்வது அறியாமல் தடுமாறி நிற்கிறோம்.

ஏழாலை வடக்கு,
ஏழாலை.

(18590)


உன் நிழலில் நிற்கும்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம் - பருத்தித்துறை

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2023

# மாணவர் கௌரவிப்பு நிகழ்வு



ஸ்.ஜன்ஸ்ரீன் [175] | க.தேஜா [168] | சு.பிரவீன் [165] | வி.நதுமிதன் [162] | அ.சதனிகன் [162] | சி.தக்ஷயன் [160] | தே.ஹம்சி [159] | சா.சரணிகா [158] | கோ.லதுர்சின் [156]



பு.ஆஜித் [155] | பி.சண்முகப்பிரியா [153] | பி.தேனுஜா [149] | ம.ஆதிசன் [149] | பி.ஹிருத்திக் [149] | ஜெ.சஸ்மிதா [148] | சு.சிவதாஸ் [146] | சி.ஹர்ஷிகா [146] | ச.துஸ்மினா [145]



செ.ஜெனுக்ஷான் [145] | ஜெ.மதுஷிகா [145] | ம.அக்ஷயா [145] | கி.சுபீட்ஷா [141] | அ.கோபிஷா [141] | பா.ரன்சிகா [141] | மோ.தனுக்ஷன் [140] | ப.அனிஸ்கா [138] | ர.தர்ஷாந் [138]



ர.றக்ஷனா [136] | சு.சத்வின் [136] | ப.திருசிகன் [130] | அ.அப்சரா [129] | ரா.ஜசியேல் [129] | தி.டிலக்ஷா [128] | து.துயலிசா [125] | பி.பிரகீதா [124] | அ.அபித்தா [123]



து.திபிதா [121] | க.லோசிதன் [119] | ஜெ.டிலோஜன் [113] | ஜெ.கரிஸ் [113] | ஸ்ரீ.தர்ஷிகன் [112] | ர.சிவான்ஜன் [107] | தி.கனுஷா [103] | இ.தனுஸ்குமார் [103] | அ.அஸ்வினா [103]



தி.டக்சிகா [100] | ம.வம்ஷயன் [94] | பு.நித்தீஸ் [94] | சு.துஸ்யந்தி [91] | பா.தஸ்வினி [91] | றா.கனிஷன் [91] | ப.ஹரிகரன் [81] | ர.சிவானுஷன் [80] | சி.வர்னிஷா [80] | க.டினுசன் [70]

**வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற 21 மாணவர்களோடு 100 புள்ளிக்கு மேல் பெற்ற 27 மாணவர்களையும் 70 க்கும் 100க்கும் இடையில் புள்ளிகளைப் பெற்ற 08 மாணவர்களையும் வழிநடாத்திய அதிபர் ம.ரகுதீபன் மற்றும் அவர்களுக்குப் போதித்த ஆசிரியப்பெருந்தகைகளையும் பாராட்டி வாழ்துவதுடன் அவர்களை வழிநடாத்திய பெற்றோர்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.**

(18614)




**வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம், யா/மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடரில் இடம் பிடித்த இந்திய வீரர்கள்



இங்கிலாந்து டெஸ்ட் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட இருக்கிறது. முதல் டெஸ்ட் வருகிற 25 ஆம் திகதி ஐதராபாத்தில் தொடங்குகிறது.

இந்த நிலையில் முதல் இரண்டு போட்டிகளுக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ரோகித் சர்மா கப்டனாகவும் பும்ரா துணைக் கப்டனாகவும் நியமிக்கப் பட்டுள்ளனர்.

கே.எல். ராகுல், கே.எஸ். பரத், த்ருவ் ஜுரேல் (அறிமுகம்) என மூன்று விக்கெட் கீப்பர்கள் அணியில் இடம் பிடித்துள்ளனர்.

பும்ரா, முகமது சிராஜ், முகேஷ் குமார், ஆவேஷ்கான் என நான்கு வேகப்பந்து வீச்சாளர்கள் இடம் பிடித்துள்ளனர்.

அஸ்வின், ஜடேஜா, அக்சார் பட்டேல், குல்தீப் யாதவ் ஆகிய சுழற்பந்து வீச்சாளர் களும் இடம் பிடித்துள்ளனர்.

சுப்மன் கில், ஜெய்ஸ்வால், ரோகித் சர்மா, விராட் கோலி, ஷ்ரேயாஸ் அய்யர் ஆகியோர் பட்ஸ் மேன்களாக இடம் பிடித்துள்ளனர். (நி)


# கண்ணீர் அஞ்சலி

ஓய்வுநிலை ஆசிரியர் திரு. **க.கதிரவேலு** அவர்களின் அன்புத் துணைவியார்.



திருமதி
**புஸ்பராணி கதிரவேலு**
( உரும்பிராய் )

அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**வலம்புரி நிர்வாகம்**

# என்றும் மறவோம்!



**லிங்கோற்பவநாதர் தர்மாம்பிகை**

எமக்கு அனுராதபுரம் விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயம் மற்றும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் கல்வி கற்பித்த ஆசிரியை நமசிவாயம் மிஸ் (நாங்கள் கல்வி கற்றவரை அவர் செல்வியாகவே இருந்தார்) அவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்! அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீ ஆடல்வல்லானின் பாதகமலங்களைப் பிரார்த்திக்கின்றோம்! ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பழைய மாணவர்களின் சார்பாக
தங்க. முகுந்தன் மூளாய் 077 727 9238

(C-8133)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3016

Search for people, places and things

### விது

தூக்கம் வரலனா 1,2,3 னு எண்ணுறதுக்கு பதிலா லட்சத்துல இருந்து இறங்கு வரிசையா எண்ணுங்க... தூக்கம் வந்துருமா டாக்டர்...



வருதோ இல்லையோ இந்த கருமத்த எண்ணுறதுக்கு பதிலா பேசாம தூங்கிரலாமுன்னு தோனிரும்...!!

### கர்ணா

அண்ணே உட்கார முடியாத தரை எது அண்ணே...? தெரியலைடா...




அது... புரியோதரை அண்ணே...

### சங்கர்

"இன்னிக்கு பாடம் எடுக்கல அமைதியா பேசுங்கனு" சார் சொல்லும் போது மாணவர்களுக்கு வருகின்ற மகிழ்ச்சி இருக்கே அது அளவற்றது...




மீண்டும் அப்படி ஒரு Period வராதனு ஏங்கி கிடப்போம்

### பிரபா

பழுதடைந்த ஒரு லாரியை மற்றொரு லாரி கயிறு கட்டடி இழுத்து செல்வதை ஒருவர் பார்த்தார்..

என்ன சார் ரொம்ப நேரமா பார்த்துக்கிட்டே இருக்கீங்க என உதவியாளர் கேட்டார்..

ஒரு கயிறை கொண்டு போறதுக்கு இரண்டு லாரியா என கூறிவிட்டு மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தார் அந்நபர்...!!!

### அசோக்

அழகான பொண்ணு சிரிச்சிட்டு போன அடுத்த இரண்டு செக்கனுக்குள்ள பையன் கட்டுற மனக்கோட்டை இருக்கே



ராஜராஜ சோழனால கூட கட்ட முடியாது!...

### சாரு

திருடன்- ஏட்டய்யா எங்க பேர் கூட "திரு"ன்னு மரியாதையா ஆரம்பிக்குது



ஆனா உங்க பேர் பாருங்க "போலி"ன்னு ஆரம்பிக்குது...
😂😂😂

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் மீதான தடையை நீக்கக்கோரி பிரித்தானியாவில் சட்டப்போராட்டம்

## நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தீர்மானம்

(லண்டன்)

**பிரித்தானியாவில் விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவதற்கான தொடர் சட்ட போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் அறிவித்துள்ளது.**

இது தொடர்பில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,மௌனிக்கப்பட்ட ஆயுதப் போராட்டத்தின் மீதான நீதியற்ற தடையை சவாலுக்குட்படுத்தவும் இலங்கையில் இனவழிப்புக்கான மறைமுக ஆதரவை இல்லாமல் செய்யவும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கமானது தடை செய்யப்பட்ட அமைப்புகளின் மேன்முறையீட்டு ஆணைக்குழுவிடம் மேன்முறையிட்டிருந்தது.

பிரித்தானிய உள்துறை செயலாளர் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை மதிப்பீடு செய்த முறைமையானது நீதிக்கோட்பாடுகளுக்கு முரணானது என்றும் அதன் காரணமாக சட்ட வலுவற்றது என்றும் கடந்த 2020ஆம் ஆண்டு ஒக்டோபர் 21 ஆம் திகதி ஆணைக்குழு தீர்ப்பளித்திருந்தது.

அச் சட்டவிரோதச் செயலுக்கு பரிகாரமாக, பிரித்தானிய உள்துறை செயலாளர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தடை தொடர்பான முடிவை மீள் பரிசீலனை செய்யும்படி உத்தரவிட்டு இருந்தது.

பிரித்தானிய உள்துறை செயலாளர் மீண்டும் கடந்த 2021 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 31 ஆம் திகதி விடுதலைப் புலிகளை தடை செய்யப்பட்ட அமைப்புகளுக்குள் பேணும் தனது முடிவை நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்திற்கு அறிவித்திருந்தார்.

இந்த முடிவிற்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் மேன்முறையீடு செய்திருந்தது.

2022 ஆம் ஆண்டு மேன்முறையீடு செய்திருந்த இந்த வழக்கு 2024 ஆம் ஆண்டு மார்ச் 12 ஆம் திகதி நீதிமன்றத்திற்கு வருகின்றது.

நீதியற்ற இந்த தடையை நீக்கும் செயற்பாடுகள் மற்றும் சட்ட சவாலுக்கான இந்த மேன்முறையீடானது அடுத்த கட்டத்துக்கு நகர்வது ஒட்டுமொத்த தமிழ் மக்களின் கடமை என்பதை உணர்ந்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் இந்த நீதி போராட்டத்திற்கு அனைவரும் கரம் கொடுப்போம் எனவும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# முடங்கப்போகும் சுகாதாரத்துறை

(கொழும்பு)

மருத்துவர்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து சுகாதாரத்துறை ஊழியர்களும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

சுகாதார துறையில் உள்ள 27 தொழிற் சங்கங்களுடன் இணைந்து இந்த அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# நாடு திரும்பினார் இளவரசி



(கொழும்பு)

இலங்கைக்கான உத்தியோகபூர்வ பயணத்தை முடித்துக்கொண்டு இங்கிலாந்து இளவரசி ஆன் நாடு திரும்பினார்.

நேற்று அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து லண்டன் நோக்கி பயணமான விமானத்திலேயே அவர் புறப்பட்டார். (நி)

# விவசாயிகளை மேம்படுத்தாமல் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியாது

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி



(கொழும்பு)

மனித மற்றும் பௌதீக காரணிகளினால் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். விவசாயிகளை மேம்படுத்தாமல் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைய முடியாது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்ற தேசிய அரிசியை ஊக்குவித்தல் தொடர்பான தனி நபர் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது, நாங்கள் தேசிய அரிசியிலான உணவையே சிறு வயது முதல் உண்கின்றோம். ஆனால் இப்போது இறக்குமதி செய்யப்படும் அரிசியை அதிகளவில் வாங்குகின்றனர். ஆனால் தேசிய அரிசியில் சுவை மாத்திரமன்றி சத்துக்களும் அதிகமாகும். இதனால் தேசிய அரிசியை ஊக்குவிப்பது அவசியமாகும்.

காலநிலை மாற்றங்களால் பெருமளவிலான வயல் நிலங்கள் சேதமடைந்துள்ளன.

இதனால் விவசாயிகள் பெரும் பொருளாதார நெருக் கடிக்கு தள்ளப்பட்டுள்ளனர். முறையான கணக்கெடுப்புகளை நடத்தி நிவாரணங்களை வழங்கி அவர்களுக்கு நட்ட ஈடுகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பல்வேறு காரணிகளினால் நாட்டின் தேசிய விவசாயத் துறை வீழ்ச்சியடைந்துள்ளது. [illegible] சந்தைய மான வகையில் விவசாய கொள்கை மறுசீரமைக்கப்பட வேண்டும். பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளை மேம்படுத்தாமல் பொருளாதார ரீதியில் ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாது என மைத்திரி தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்தித்துளிகள்

### ஜனாதிபதி சுவிஸ் விஜயம்

(கொழும்பு)

உலக பொருளாதார மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகருக்குச் விஜயம் மேற்கொண்டுள்ளார்.

உலக தலைவர்கள் மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

மேலும் கடந்த வருடம் இலங்கை எதிர்கொண்டிருந்த பொருளாதார நெருக்கடிகள் காரணமாக உலகப் பொருளாதார மாநாட்டில் இலங்கை பிரதிநிதிகள் எவரும் பங்கேற்கவில்லை என்பதுடன் இம்முறை ஜனாதிபதியின் இந்த விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்குமென குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

### 'யுக்திய' வேட்டை 897 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் போதைப் பொருள் மற்றும் பாதாளக் குழுக்களை ஒடுக்கும் "யுக்திய" பொலிஸ் விஷேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் நேற்று முன்தினம் 897 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அவர்களில் 24 பேர் தடுப்புப் பொலிஸ் உத்தரவின் கீழ் விசாரணை செய்யப்பட்டு வருவதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், கைதானவர்களில் போதைப்பொருட்களுக்கு அடிமையான 22 பேர் புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி)

### கடந்த ஆண்டில் வரி வருமானம் 80 வீதமாக அதிகரிப்பு

(கொழும்பு)

வரலாற்றிலேயே அதிகூடிய வரி வருமானம் 2023 ஆம் ஆண்டு பதிவாகியுள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2023 ஆம் ஆண்டு வரி வருமானம் 80% அதிகரித்துள்ளதாக உள்நாட்டு இறைவரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, வரலாற்றிலேயே அதிக வரி வருமானம் பெறப்பட்ட சந்தர்ப்பமாக இது பதிவாகியுள்ளது.

இதேவேளை, கடந்த வருடம் மொத்த வரி வருமானம் 1550.6 பில்லியன் ரூபாவாக பதிவாகியுள்ளதாக உள்நாட்டு இறைவரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் பெறப்பட்ட வரி வருமானம் 861.2 பில்லியன் ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (நி)

## திருமறைக் கலாமன்றத்தின் பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் நடத்தும் பொங்கல் விழா இம் முறையும் காலை,மாலை நிகழ் வுகளுடன் ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது.

பொங்கல் தினமாகிய நாளை திங்கட்கிழமை காலை 5.30 மணிக்கு இல.238,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள திருமறைக்கலாமன் றத்தின் பணியகத்தில் பொங் கல் வைபவமும் அதனைத் தொடர்ந்து காலை 7 மணிக்கு இல.17,மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள மன்றத்தின் கலைஞான சுரபி தியான இல்லத்தில் பண்பாட்டு வழிபாடும் இடம் பெறும்.



வழமையாக பொங்கல் தினத்தன்று மாலையில் இடம்பெறும் கலை நிகழ்ச்சிகள் இம்முறை எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு இல. 238, பிரதான வீதி, யாழ்ப் பாணத்தில் அமைந்துள்ள திரு மறைக் கலாமன்ற அரங்கில் ஆரம்பமாகி இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள் ளனர். (நி)

## விஞ்ஞான ஊக்கியின் 10 ஆவது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

விஞ்ஞான ஊக்கியின் 10 ஆவது ஆண்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வடலியடைப்பு ஸ்ரீசாஸ்தா திருமண மண்ட பத்தில் நடைபெறவுள்ளது. யா/ வண். நாவலர் மகாவித்தியாலய அதிபர் கந்தையா கலியுகன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந் தினராக யாழ்.மாவட்ட செயலர் அம்பலவாணர் சிவபாலசுந் தரன் கலந்து கொள்வார். (நி)

## களைகட்டிய பொங்கல் வியாபாரம்

(சாவகச்சேரி)

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு நேற்று சனிக் கிழமை யாழ். திருநெல் வேலியிலும் சாவகச்சேரியிலும் பொங்கல் சந்தை களை கட்டியிருந்தது.

வரி அதிகரிப்புக் காரணமாக பொருட்களின் விலை ஏற்றம், பொருளாதார நெருக்கடி உள் ளிட்ட சவால்களுக்கு மத்தியி லும் மக்கள் ஆர்வத்துடன் பொங்கல் பொருட்களை கொள் வனவு செய்திருந்ததனை அவ தானிக்க முடிந்தது. (நி-30-33)

## குன்றும் குழியுமாக மாறிய தொண்டைமானாறு பிரதான வீதி



(யாழ்ப்பாணம்)

யாழ். அச்சுவேலி - தொண டைமானாறு வீதி ஊடாக பய ணிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

குறித்த வீதி நீண்ட கால மாக திருத்தம் செய்யப்படாமல் குன்றும் குழியுமாக காணப்பட் டது. அதனால் அந்த வீதி ஊடாக பலரும் சிரமங்களுக்கு மத்தி யிலையே பயணித்து வந்தனர்.

இந்நிலையில் கடந்த வாரங் களில் பெய்த மழை காரணமாக தொண்டைமானாறு நீர்மட்டம் அதிகரித்தது. குறித்த வீதியினை மேவி வெள்ளம் பாய்ந்தது.

ஏற்கனவே குன்றும் குழியு மாக இருந்த வீதி தற்போது வெள் ளம் மேவி ஓடுவதனால் குழிகள் தெரியாததால் பலரும் விபத்து க்கு உள்ளாகி வருகின்றனர்.

புதிதாக அந்த வீதியில் பய ணிப்பவர்கள் கடும் சிரமங் களை எதிர்நோக்குவதுடன் சிறிய ரக மோட்டார் சைக்கிள் மற்றும் கார்களில் பயணிப் போரின் வாகனங்களும் சேத மடைந்து வருகின்றன.

குறித்த வீதி ஊடாக பய ணிக்க முடியாத நிலைமைகள் காணப்படுகின்றபோதிலும் அவை தொடர்பிலான அறிவு றுத்தல்கள் காட்சிப்படுத்தபடா மையால் பலரும் அந்த வீதி ஊடாக பயணித்து விபத்துக் களை சந்திக்க நேரிடுவதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-33)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் தை மாதம் நாளை மறுதினம் செவ் வாய்கிழமை மு.ப 9.00 மணி க்கு களபாவோடை வசந்த நாக பூசணி அம்பாள் தேவஸ்தான கொடியேற்ற வைபவம் நடை பெறவுள்ளது. இதனைத் தொடர் ந்து பத்துத்தினங்கள் மஹோற் சவம் நடைபெறும்.

பூர்த்தி தினமாகிய 25 ஆம் திகதி வியாழக்கிழமை தைப் பூரணையில் "ஸ்ரீ வசந்த நாக புஷ்கரணி" தீர்த்தத் தடாகத்தில் தீர்த் தோற்சவம் நடைபெறும்.

அம்பாளின் திருவருட் பெருங் கருணையை முன்னிட்டு மஹோற்சவ காலங்களில் அடி யார்கள் வருகை தந்து வழி பாடு செய்து அம்பிகையின் அருட்பிரசாதத்தைப் பெற்றுய் யுமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (நி)

## மாட்டின் தலையுடன் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கீரிமலை பகுதியில் மாட்டின் தலையுடன் இளைஞன் ஒருவர் பொலி ஸாரினால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய் யப்பட்டுள்ளார்.

கீரிமலை பகுதியில் மாடொ ன்றை சட்ட விரோதமான முறை யில் இறைச்சியாக்குவதாக காங் கேசன்துறை பொலிஸாருக்கு தகவல் கிடைக்கப்பெற்றது.

தகவலின் பிரகாரம் சம்பவ இடத்திற்கு பொலிஸார் விரை ந்த போது, சம்பவ இடத்தில் மாட் டின் தலையுடன் நின்ற இளை ஞனை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இளை ஞனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து, வைத்து விசா ரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார் மாட்டிறைச் சியுடன் தப்பி சென்ற ஏனைய நபர்களை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ள னர். (நி-33)

## பன்னிரு திருமுறை ஓதலும் கந்தபுராண படிப்பும்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப் பாய் அருள்மிகு கண்ணகாம் பிகா சமேத கண்ணலிங்கேஸ் வரர ஆலயம் மற்றும் கண் ணகியம்மன் ஆலயங்களில் நாளை 15 ஆம் திகதி திங்கட் கிழமை காலை 6 மணிக்கு பொங்கல் பூஜை வழிபாடும் மாலை 4 மணிக்கு பன்னிரு திருமுறை ஓதும் நிகழ்வும் இடம்பெறும்

மறுநாள் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு ஷஷ்டி திதியில் கந்த புராண படிப்பு நிகழ்வும் மாலை 4.30 மணிக்கு விஷேட பட்டிப் பொங்கல் பூஜை நிகழ்வும் இடம் பெறும் என ஆலய பரிபாலன சபை யினர் அறிவித்துள்ளனர். (நி)

## சீமெந்து தொழிற்சாலையில் இரும்பு திருடியவர்கள் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சா லையில் இரும்பு திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கடந்த வியாழக் கிழமை மல்லாகம் நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

சீமெந்து தொழிற்சலையில் கும்பல் ஒன்று இரும்பு திருட் டில் ஈடுபடுவதாக பொலிஸா ருக்கு கிடைத்த இரகசிய தக வலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலி ஸார் திருட்டில் ஈடுபட்டு இருந்த மூவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மூவ ரையும் விசாரணைகளின் பின் னர் மல்லாகம் நீதிவான் நீதி மன்றில் முற்படுத்தியதை அடுத்து மூவரையும் விளக்க மறியலில் வைக்குமாறு, நீதி வான் உத்தரவிட்டார். (நி-33)

## விண்ணப்ப முடிவுத்திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

மார்ச் மாதம் கொண்டாடப் படவுள்ள சர்வதேச மகளிர் தினத்தில் பெண் சாதனையா ளர்களை கௌரவிக்கும் முக மாக வடக்கு மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தை கொண்ட பல்வேறுபட்ட பெண் துறை சார் சாதனையாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன. அத்துடன் "பெண்க ளின் பொருளாதார வலுவூட்ட லானது பாலின சமத்துவ உல கின் மையமாகும்.வருமான மீட்டுவதற்கும் கற்றுக்கொள் வதற்கும் வழி நடத்துவதற்கும் பெண்களிற்கு சம வாய்ப்புக்கள் அழிக்கப்படும் போது ஒட்டு மொத்த சமூகமும் செழிக்கும்" எனும் கருப்பொருளில் குறும் படத்திற்கான திரைக்கதை, குறும்படம், ஆவணப்படம், புகைப்படம் மற்றும் ஓவியப் போட்டிகளை நடத்தவுள்ளது.

இப்போட்டிகளுக்கான விண் ணப்ப முடிவுத்திகதியானது பலரது கோரிக்கைக்கமைவாக இம் மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது

திறந்த போட்டிகளாக நடை பெறும் இப் போட்டிகளில் பங்கு பற்ற ஆர்வம் உள்ள வர்கள் மகளிர் விவகார அமை ச்சு, வ.மா, இல.04,பூருடி லேன், புங்கன் குளம் சந்தி, அரியாலை, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரி ஊடாகவோ அல் லது அமைச்சின் மின்னஞ்சல்: npminwa@gmail.com மற்றும் தொலைபேசி இல : 02122 208 84/021 222 0883 ஊடாகவோ தொடர்பு கொண்டு போட்டி நுழை வுக் கான விண்ணப்பம் மற்றும் விதிமுறைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்

மேலதிக விபரங்களுக்கு www.np.gov.lk எனும் வட க்கு மாகாணசபையின் இணை யத்தளத்தினை பார்வையிட லாம் என செயலாளர் பெ.வாகீ சன் அறிவித்துள்ளார். (நி)

## குமுக்கண் குள வீதியின் எஞ்சிய பகுதியை புனரமைக்க கோரிக்கை



(சாவகச்சேரி)

வட்டுக்கோட்டை அராலி மத்தி குமுக்கண் குள வீதியின் புனரமைக்கப்பட வேண்டிய தேவைப்பாடுடைய எஞ்சிய பகுதியையும் புனரமைத்து உதவுமாறு கிராம மக்கள் வலி காமம் மேற்கு பிரதேசசபைச் செயலாளரிடம் எழுத்து மூல மாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் அனுப்பி வைத்துள்ள கோரி க்கை கடிதத்தில்

குமுக்கண் குள வீதி கொங் கிறீட் வீதியாக புனரமைக்கப் பட்ட போதிலும் மேலும் 75 மீற்றர் தூரம் வீதி புனரமைக் கப்பட வேண்டிய தேவை காணப்படுகிறது.

வீதியின் புனரமைக்கப்ப டாத பகுதியும் புனரமைக்கப்ப டும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் இன்றுவரை அந்த எஞ்சிய பகுதி புனரமைக்கப்பட வில்லை.

இதனால் மாரி காலத்தில் கிராம மக்கள் போக்குவரத்துச் செய்ய மிகவும் சிரமப்படுகின் றனர். அராலி மத்தி கிராம மக் களின் பிரதான வீதியாக குமுக் கண் குள வீதி காணப்படுவ தால் வீதியின் எஞ்சிய பகுதி யையும் புனரமைத்து உத வுங்கள். என மேலும் அவர்கள் தமது கோரிக்கை கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர். (நி-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 423
Viber 076 636 3378



# அதிகரிக்கும் சைபர் குற்றங்களும் இலக்கு வைக்கப்படும் பாடசாலை மாணவர்களும்

கணினி அமைப்புகளை பயன்படுத் தி தனிநபர்களுக்கு எதிரான வன்முறையை/ அச்சுறுத்தலை ஏற்படுத்துவதன் மூலம் உடல், உள, பாலியல் மற்றும் பொரு ளாதார தீங்கு விளைவித்தல் சைபர் குற்றங்கள் என வரையறுக்கப்படும். அடையாளத்திருட்டு (identity theft), இணைய மிரட்டல் (cyber bullying) , ஹக்கிங் (Hacking), சைபர் stalking, phishing போன்றன சைபர் குற்றங்க ளுக்குள் அடங்கும்.

இலங்கையில் கடந்த வருடத்தில் மட்டும் 15000 இற்கு மேற்பட்ட சைபர் குற்றங்கள் நிகழ்துள்ளதாக SLCERT (Srilanka computer Emergency Readiness team) தெரிவித்துள்ளது. குறிப்பாக தமது வயது ஆர்வத்தினாலும் பக்குவ மின்மையினாலும் பின்விளைவுகள் பற்றிய அறிவின்மையினாலும் பாட சாலை மாணவர்கள் அதிகளவில் சைபர் வலையினுள் சிக்குகின்றனர். மேலும் பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்படு மிடத்து தமக்கு ஏற்பட்ட பாதிப்புகளை ஆசிரியர்களிடமோ பெற்றோர்களி டமோ அல்லது பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடமோ தெரிவிக்க முன்வ ராமையை சைபர் குற்றவாளிகள் தமக்கு சாதகமாக பயன்படுத்தி கொள்கின்ற னர்.

**பாடசாலை மாணவர்கள் எவ்வாறு இலக்கு வைக்கப்படுகின்றனர்?**

தற்போதைய காலத்திலே பாடசாலை மாணவர்களிடையே ஸ்மார்ட் தொலை பேசி பாவனையானது அதிகரித்து காணப் படுகின்றது. இந்த நிலையானது கொவிட்-19 காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட ஆன்லைன் மற்றும் Zoom வகுப் புகளில் ஆரம்பித்து தற் போது அதிகரித்த நிலையில் காணப் படுகிறது. சமூக வலைத்தளத் தில் தெரியாத நபர்களுடன் தொடர்பு கொள்ளுதல் மற்றும் உரையாடல், தனிப்பட்ட தகவல்கள் மற்றும் அந்தரங்க புகைப்படங் களை பரிமாறுதல், குறுஞ்செய்தி/ விளம்பரங்களில் வரும் பாதுகாப் பற்ற லிங்குகளை கிளிக் செய்தல் இலகுவான நுழைவாயிலாக அமை கின்றன.

**இலங்கையிலும் சைபர் குற்றங்களை தடுப்பதற்கான சட்ட திட்டங்கள் நடைமுறையில் உள்ளன என்பதை பலர் அறியாமல் உள்ளனர். அவ்வகையில் கணினி அவசர நபர்நிலை குழுவினை (CERT) 011 269 1692 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவோ report@cert.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரியூடாகவோ தொடர்பு கொண்டு முறையீடுகளை மேற்கொள்ளலாம்.**

**சைபர் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு**

இலங்கையிலும் சைபர் குற்றங்களை தடுப் பதற்கான சட்ட திட்டங்கள் நடை முறையில் உள்ளன என்பதை பலர் அறியாமல் உள்ளனர். அவ்வகையில் கணினி அவசர தயார்நிலை குழுவினை (CERT) 011 269 1692 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவோ report@cert.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரியூடாகவோ தொடர்பு கொண்டு முறையீடுகளை மேற்கொள்ளலாம்.

**சமூகத்தின் பொறுப்பு**

சமூகவலைத்தளங்களை பாதுகாப் பான முறையில் பயன்படுத்துபவர்களின் அறிவு வீட்டு மட்டத்திலோ பாடசாலை மட்டத்திலோ வழங்கப்படாமையாலும் சைபர் குற்றங்களுக்கு இலக்காக்கப் படும் போது வெளியே கூறினால் தான் குற்றவாளிக் கூண்டில் நிறுத்திவைக்கப் படலாம் எனும் பீதியிலும் வெளியே கூறமுடியாத நிலைக்கு பாடசாலை மாணவர்கள் தள்ளப்படுகின்றனர்.



இந்த நிலையை மாற்றுவதற்கு சமூக ரீதியிலும் பாடசாலை ரீதியிலும் விழிப் புணர்வு செயற்றிட்டங்களை நடைமுறைப் படுத்துவது இன்றைய காலத்தில் அத்தி யாவசியமானதாக காணப்படுகின்றது.

**மருத்துவபீட மாணவர்கள்,**
**43 ஆம் அணி,**
**யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடம்.**

சமூகப் பொறுப்பின்றிய எம் சமுதாயத்தை எப்படித் திருத்துவது என்று தெரியவில்லை என்கிறார்கள் மூத்தவர்கள்.

ஏன் மூத்தவர்கள் எமது சந்தோசத்தில் குறுக்கிடுகிறார்கள் என்கிறார்கள் தற்கால இளையோர்.

இந்த இரண்டு முட்டு மோதலுக்குள் சிக்கி சின்னாபின்ன மாகிறது எமது கலாசாரம்.

ஆம், தற்போதைய தொழில்நுட்ப வளர்சி சமூகத்தில் பாரிய பாய்ச்சலை ஏற்படுத்தியுள்ளது. இதுவே சமூகப் பிறழ்வுக்கும் காரணமாகிறது.

இந்நிலையில் எமது இளம் சமூகம் செல்லுமாக இருந்தால் எம் தமிழ் கலாசார விழுமியங்கள் அனைத்தும் சிதைந்து போகும் என்பது திண்ணம்.

மூத்தோரை மதிக்கும் சமூகம் இப்போது இல்லை என்பது தான் உண்மை.

இந்த மாற்றத்திற்கு அதிகரித்து நிற்கும் போதை வஸ்து பாவனை முக்கிய காரணமாகிறது.

விரல் நுனியில் கிடைக்கும் இணைய வசதி பிறழ்வான சமூகத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

சமூக வலைத்தளங்களில் மேற்கொள்ளப்படும் தனிமனித வசைபாடல் யாரும் எதையும் பேசிவிடலாம் என்ற மடையைத்திறந்து விட்டிருக்கின்றது.

இதில் முட்டி மோதும் இளம் சமூகத்தினரிடம் இரக்கம், கருணை, ஈகை என்பன இம்மியும் இல்லாது போய்விட சண்டித்தனக் கலா சாரத்தை கையிலெடுக்கிறது.

இதில் அவர்களின் தவறேதும் இல்லை. பெரியவர்களாகிய எமது தவறே அதிகம் உண்டு.

சரி எது? தவறு எது என்பதைக் கூட சீர்தூக்கிப் பாராத சமூகம் உருவாக நாம் ஒவ்வொருவரும் காரணமாகிவிட்டோம்.

இனி இவற்றை சரி செய்வதென்பது நிச்சயமற்ற ஒன்று ஆயினும் முயன்றால் முடியும்.ஏனென்றால் அவர்களிடம் ஓடிக்கொண்டிருப்பது தமிழ் கலாசாரத்தை பின்பற்றியவர்களின் இரத்தமே.

முயற்சிப்போம் எமது சமூகத்தை முன்னேற்ற.

அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



## வடக்கை உலுப்பப்போகிறது காணி உரிமை விவகாரம்

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் பண்டிதர் பரமலிங்கத்தைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** அது சரி எங்க பண்டிதர் ஐயாவை இன்னும் காணவில்லை. ஏதேனும் உடல்நலக் குறைவோ.

விதானையார், பண்டிதரை விசாரிக்க அந்நேரம் பார்த்து பண்டிதர் பரமலிங்கம் ஆலடிக்கு வந்து சேர்ந்தார்.

என்ன பண்டிதர் ஐயா இன்றைக்குப் பிந்திப் போச்சுது. என்ன சங்கதி. விதானையார் விசுவலிங்கம் விசாரித்தார்.

**பண்டிதர்:-** அதை யேன் கேட்கிறியள். என்ர காணியை ஆரோ ஒரு பகுதி வெளிப்படுத்தல் உறுதி முடிச்சு விற்றுப்போட்டினம். காணியை வாங்கினவர் காணிக்குள்ள வந்து நிற்கிறார்.

அது பெரிய பிரச்சினையாய் போயிற்றுது. அதனால தான் பிந்திப்போனன்.

**மூப்பர்:-** பண்டிதர் ஐயா இப்ப யாழ்ப்பாணத்தில வெளிப்படுத்தல் உறுதியோட, காணி விற்கிற காரியம் கண்ட பாட்டில நடக்குது. சுருக்கமாகச் சொன்னால் சட்ட விரோதச் செயலாக இது நடக்குது எண்டு தான் சொல்ல வேணும்.

**கங்காணி:-** மூப்பர் சொல்லுறது நூறு வீதம் உண்மை. இப்படிக் காணி விற்கிறதுக்கு சில லோயர்மாரும் ஒத்துழைப்பு எண்டு சனம் கதைக்குது.

**வாத்தியார்:-** இதில இன்னுமொரு சங்கதி இருக்குது.

**சாத்திரியார்:-** என்ன வாத்தியார் சொல்லுறியள்.

**வாத்தியார்:-** காணி விற்பனை தொடர்பில அல்லது குறித்த காணி எனக்குச் சொந்தம் அதை எவரும் வாங்கவோ விற்கவோ முடியாது எண்டு பத்திரிகைகளில் செய்யப்படும் விளம்பரங்களை உறுதிப்படுத்துகிற சட்டத்தரணிகள் தங்கட பெயரை பத்திரிகை விளம்பரத்தில குறிப்பிட மறுக்கினம். அது தான் ஏனெண்டு தெரியல்ல.

முன்பெல்லாம் சட்டத்தரணியால உறுதிப்படுத்தப்படுகிற விளம்பரங்களைப் பிரசுரிக்கும் போது "வரைபு" எண்டு குறிப்பிட்டு அதில சட்டத்தரணியின் பெயரும் பிரசுரிக்கப்படும்.

ஆனால் இப்ப சில சட்டத்தரணிகள் டாக்குத்தர் கொடுக்கிற மருந்துத்துண்டு மாதிரியல்லோ கொடுக்கினம். அதோட தங்கட பெயரை விளம்பரத்தில பிரசுரிக்க வேண்டாம் எண்டும் சொல்லுகினமாம்.

**மூப்பர்:-** ஓ, இப்ப யாழ்ப்பாணத்தில காணி வழக்கில ஈடுபட்டால், அந்த லோயரையும் சனம் ஒரு மாதிரியாகப் பார்க்குது. அதாலையும் பத்திரிகைகளில தங்கட பெயர் இடம்பெறாமல் இருப்பது நல்லதெண்டு லோயர்மார் நினைக்கினம் போல.

**சிறாப்பர்:-** அதுசரி காணிக்கு வெளிப்படுத்தல் உறுதி முடிச்சு அதனை விற்கும் வரைக்கும் உரிமையாளர்கள் எங்க போனவையள்.

**விதானையார்:-** எங்கட ஆட்கள் எதிலும் அசமந்தம் தானே. வெளிப்படுத்தல் உறுதி முடிச்சு விக்கிற காணிகளைப் பார்த்தால் அந்தக் காணிகளுக்கு ஆன உறுதியும் இல்லை. ஆன உரித்தும் இல்லை. அதோட அந்தக் காணியைத் துப்பரவு செய்து வேலி அடைச்சுப் பராமரிக்கிறதும் இல்லை.

ஏதோ அநாதரவான காணி போல கிடக்கிறதால தான்...

ஓ! இந்தக் காணியை நாங்கள் தத்தெடுத்தால் என்ன எண்டு சிலர் நினைத்து அதனைச் செய்து போடுகினம்.

**வாத்தியார்:-** என்ன இருந்தாலும் வெளிப்படுத்தல் காணி விற்பனை எண்டு வருகிற போது அதற்குப் பின்னால ஒரு சில பிரக்கிராசிமாரும் நொத்தாரிசுமாரும் இருக்கத்தான் செய்யினம்

**பண்டிதர்:-** வாத்தியார் சொல்லுறது உண்மை தான். ஆனால் வெளிப்படுத்தல் உறுதிக் காணியை வாங்கிறவர்களும் கொஞ்சம் யோசிக்க வேணுமல்லோ.

**கங்காணி:-** அவையள் ஏன் யோசிக்கினம். அவையளும் இப்படியான காணி வாங்கினால், குறைஞ்ச விலையில வாங்கலாம் எண்ட சிந்தனையோட இருக்கினம். அப்படிப் பட்டவர்கள் தான் உந்தக் காணிகளை வாங்கிறதில சம்பந்தப்படுவினம்.

உண்மையாக, நேர்மையாகக் காணியை வாங்கிறவராக இருந்தால் அவர்கள் காணியை வாங்க முதல் அந்தக் காணியின்ர தோம்பு எடுத்து அதுபற்றி ஆராய்ந்து காணி உரித்துப் பற்றி உறுதி செய்வினம்.

அப்படிச் செய்யாமல் எடுத்த எடுப்பில காணி வாங்கிறதாக இருந்தால், அவர்களிட்டயும் நேர்மையீனம் இருக்குது என்பது தான் பொருள்.

**சாத்திரியார்:-** சரி... சரி... இண்டைக்கு காணிப் பிரச்சினையோட ஆலடி மாநாடு நிறைவடையப் போகுது போல.

**விதானையார்:-** சாத்திரியார், எங்கட வட புலத்தில காணிப்பிரச்சினை பெரும் பூதாகரமாக வரப்போகுது.

இப்ப காணி விற்பனை தாராளமாக நடக்குது. இது விடயத்தில பொலிஸாரும் பிரச்சினையை தட்டிக்கழிக்கினம் எண்டு அறிஞ்சனான்.

**மூப்பர்:-** காணி விற்பனையில் மட்டுமல்ல, போதைப் பொருள் வியாபாரத்துடனும் பொலிஸார் சிலருக்குத் தொடர்பு உண்டு என்று புலனாய்வுத் துறையின்ர அறிக்கையில தெரிவிக்கப்பட்டிருக்குது.

**சாத்திரியார்:-** ஓ! பொலிஸார் பின்னணியில இருப்பினம். பிறகு தங்களுக்கு ஆபத்து வருகுதெண்டவுடன அவர்களே' களத்தில இறங்கிக் கைது செய்யத் தொடங்கிவிடுவினம்.

**சிறாப்பர்:-** சாத்திரியார் சொல்லுறது உண்மை தான். இந்தா பாருங்க, போதைப் பொருள் வியாபாரத்திற்கு உதவியாக இருந்த பொலிஸார் இப்ப போதை வஸ்து வியாபாரத்தில ஈடுபடுகிறவர்களையும் அதனைப் பாவிப்பவர்களையும் துரத்தித்துரத்திப் பிடிக்கினம். இந்த வேலையை எப்பவோ செய்திருந்தால், எத்தனையோ இளம் பிள்ளைகளின் வாழ்க்கை பாதுகாக்கப்பட்டிருக்கும்.

போதை வியாபாரிகளிட்ட கையூட்டு வாங்கிக் கொண்டு அவர்களைப் பேசாமல் விட்டதில எத்தனையோ இளம் பிள்ளைகள் போதைக்கு அடிமையாகிப் புனர்வாழ்வு நிலையங்களில இருக்கினம்.

இன்னும் சில பிள்ளைகள் இறந்து போயிட்டினம். இந்த அநியாயம் செய்தவியளின்ர எதிர்காலம் எப்படிப்போகும் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேணும். இவ்வாறு சிறாப்பர் கூற, ஆலடி நிசப்தமாகியது. நிசப்தத்தைக் கலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி:-** அது சரி, மண்டதீவு உப பொலிஸ் நிலையத்தின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அறிஞ்சன் என்ன சங்கதி.

**பண்டிதர்:-** போதைவஸ்து வியாபாரிகளை பொலிஸார் கைது செய்யிறதின்ர பின்னணியில தான் பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகப் பொலிஸார் தெரிவிக்கினம். ஆனால் என்னைப் பொறுத்தவரை போதை வஸ்துக்கும் பெற்றோல் குண்டுத் தாக்குதலுக்கும் இடையில தொடர்பு இருப்பதாக நான் நினைக்கல்ல.

இவ்வாறு பண்டிதர் கூற அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரசியல் கைதி ஆனந்தசுதாகர் அடுத்த பொங்கலுக்கு தனது வீட்டில் இருப்பார் என்று மைத்திரி கூறியது இப்போது நினைவில் வந்துள்ளது?

**விஜயதரன் உரும்பிராய்**

**ஜனாதிபதியின் வடக்கு விஜயத்தினால் தமிழ் மக்களுக்கு ஏதும் நன்மை உண்டா வியாசரே?**

நன்மை உண்டு என்பதை அரசியல் வாதிகள் மூடமாய் நம்பலாம் ஆனால் அதனால் ஒரு சல்லி பிரயோசனமும் இல்லை என்பது தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும்.

வழமையாக ஜனாதிபதியின் விஜயத்தின் போது குறைந்தது காணி விடுவிப்பாவது நடைபெறும்.

ஆனால் இம்முறை அதுகூட நடைபெற வில்லை.

வழமைபோல ஜனாதிபதியினால் வாக்குறுதிகள் அள்ளி வழங்கப்பட்டிருக்கிறது. இந்த வாக்குறுதிகள் எதுவும் நடை பெறப் போவதில்லை என்பதும் அவருக்குத் தெரியும். அதைவிட எமது அரசியல் தலைவர்களுக்கு அது நன்றாகத் தெரியும்.

**மதுவன் மீசாலை**

**தமிழரசுக் கட்சிக்குள் இருக்கும் முரண்பாட்டின் நிலை எப்படி இருக்கும் வியாசரே?**

தமிழ் தேசியக்கூட்டமைப்பு எனும் ஒற்றுமையின் சின்னத்தை உடைத்தெறிந்த போதே தமிழரசுக் கட்சிக்குள் பூசல் தொடங்கி விட்டது என்பது தெளிவாகப்புரிந்தது.

இப்போது தலைமைப் போட்டி விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது.

போகிற போக்கைப் பார்த்தால் தமிழரசுக் கட்சியின் எதிர்காலம் என்னவாக இருக்கும் என்று பயமாக உள்ளது.

எது எப்படியோ யார் தலைமைக்கு வந்தாலும் அந்தத் தலைமை தமிழினத்தின் காவலராய் இருந்தால் சரி.

**மதீஸ்வரன் குருநகர்**

**எனக்கு வயது 28 திருமணமாகவில்லை. வீட்டில் திருமணப்பேச்சையே எடுக்கிறார்கள் இல்லை. நான் என்ன செய்ய?**

அடேய் மதீஸ்வரன் உனக்கு எங்கையோ மச்சம் இருக்கிறது போலத் தெரிகிறது.

கடவுள் நல்ல சந்தர்ப்பத்தைத் தந்திருக்கிறார். அனுபவசாலி சொல்கிறேன். திருமணம் , அது, இது என்று மனதைப் போட்டுக் குழப்பவேண்டாம்.

இன்று காலை கூட வீட்டு வாசலில் புல்லு வெட்டிவிட்டுத்தான் வேலை வந்தேன்.

இந்த வேண்டாத வேலை எல்லாம் தேவையா என்ன?

ஆதலால் சிங்கிளாய் இரு. சந்தோசமாய் இரு. எல்லாம் நன்மைக்கே.




**அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**திகான் வடமராட்சி**

**தமிழர்களின் திருநாள் தைப் பொங்கலைப்பற்றி தமிழ் மக்களுக்கு கூறுங்களேன்?**


தைப்பொங்கல் தமிழர்களின் திருநாள். இந்துக்களின் ஒப்பற்ற உன்னத நாள்.

உலகிற்கு மழைதர, பயிர் வளர காரணமாக இருக்கும் சூரிய பகவானுக்கு நன்றி கூறுகின்ற நாள்.

வயலில் விளைந்த புது நெல்லைக் குற்றி எடுத்து முற்றத்தில் கோல மிட்டு கும்பம் வைத்து புது நெல்லரிசியில் பொங்கி அதை,எமக்கு அருளிய சூரிய பகவானுக்கு முதலில் படையலிட்டு அதன் பின் நாம் உண்ணும் இந்துக்களின் ஒப்பற்ற பாரம்பரியத்தின் திருநாள்.

இப்போது பொங்கலைப் பொது நிகழ்வாக்கி அதை அனைத்து மதங்களும் கடைப்பிடிக்கின்றன.

ஆனால் தைப்பொங்கல் என்பது தமிழர் அடையாளம். இந்துக்களின் புனித நாள். இதுவே உண்மை.



தமிழர்களின் திருநாள் தைப்பொங்கலைப்பற்றி தமிழ் மக்களுக்கு கூறுங்களேன்?

**டனுஷாந் ராசா திருநெல்வேலி**

**வடக்குக்கு வந்த ஜனாதிபதி அனைத்துத் தரப்பினரையும் சந்தித்திருந்தார். ஆனால் ஊடகங்களைச் சந்திக்காதது ஏன் வியாசரே?**

ஊடகங்களைச் சந்தித்தால் ஒன்றுக்குப் பத்தாய் எழுதி விடுவார்களோ என்ற எண்ணமாகக் கூட இருக்கலாம். சரிவிட்டு விடுங்கள். ஊடகங்களைச் சந்திப்பதால் ஒன்றும் தமிழர் பிரச்சினை தீரப்போவது இல்லையே.

எல்லாம் விதி என்று பேசாமல் இருப்பதே முறையானதும் சரியானதும்.

**சுதன் குப்பிழான்**

**இஸ்ரேல் பாலஸ்தீனத்தை அங்கீகரிக்க வேண்டும் என்று கூறுபவர்கள் ஈழத்தை அங்கீகரிக்காதது ஏன்?**

தம்பி சுதன் என்ன விடயத்திற்கும் ஆலோசனை கூறுவது இலகு. அதை நாம் கடைப்பிடிக்கின்றோமா என்பதில் தான் சூட்சுமமே இருக்கிறது.

இஸ்ரேல்- பாலஸ்தீனம் எங்கேயோ இருக்கிறது.அது பற்றி கதைத்தால் யாரும் எதுவும் கேட்கப்போவது இல்லை.

ஈழப்பிரச்சினை பற்றியோ, தமிழர் உரிமை பற்றியோ எமது தலைவர்கள் வாய் திறக்க மாட்டார்கள். ஏனென்றால் அப்படிப் பேசினால் தமது அரசியல் வாழ்வு நிர்மூலமாகிவிடும் எனும் பயம் தான்.

**கணேஸ் பருத்தித்துறை**

**அரசியல் கைதி ஆனந்த சுதாகர் அடுத்த பொங்கலுக்கு தனது வீட்டில் இருப்பார் என்று மைத்திரி கூறியது இப்போது நினைவில் வந்துள்ளது?**


ஆனந்தசுதாகர் தனது மனைவியை இழந்து நிற்கையில், அப்போதைய ஜனாதிபதி மைத்திரி, ஆனந்த சுதாகரனின் பிள்ளைகளிடத்தே அடுத்த பொங்கலுக்கு உங்கள் அப்பா உங்களுடன் இருப்பார் என்று கூறி அந்த சிறு பிள்ளைகளின் மனங்களில் பாரிய எதிர்பார்ப்பை விதைத்துவிட்டார். ஆனால் அது நடைபெறவில்லை. என்ன செய்வது ஆனந்த சுதாகர் தமிழராய்ப் பிறந்துவிட்டாரே.

சிங்களவராய் பிறந்திருந்தால் ஒரு வேளை அவருக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டிருக்குமோ என்னவோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

படம் : ஒருதலை ராகம்
பாடியவர் : எஸ்.பி.பாலசுப்பிரமணியம்
பாடல் வரிகள் : டி.ராஜேந்தர்
இசை : டி.ராஜேந்தர்



வெறும் நாரில் கரம் கொண்டு பூ மாலை தொடுக்கிறேன்
வெறும் காற்றில் உளி கொண்டு சிலை ஒன்றை வடிக்கிறேன்
விடிந்து விட்ட பொழுதில் கூட விண்மீனை பார்க்கிறேன்
விடிந்து விட்ட பொழுதில் கூட விண்மீனை பார்க்கிறேன்
விருப்பமில்லா பெண்ணை எண்ணி உலகை நான் வெறுக்கிறேன்

---

இது குழந்தை பாடும் தாலாட்டு
இது இரவு நேர பூபாளம்
இது மேற்கில் தோன்றும் உதயம்
இது நதியில்லாத ஓடம்

இது குழந்தை பாடும் தாலாட்டு
இது இரவு நேர பூபாளம்...

நடை மறந்த கால்கள் தன்னின் தடயத்தை பார்க்கிறேன்
வடம் இழந்த தேரது ஒன்றை நாள்தோறும் இழுக்கிறேன்
சிறகிழந்த பறவை ஒன்றை வானத்தில் பார்க்கிறேன்
சிறகிழந்த பறவை ஒன்றை வானத்தில் பார்க்கிறேன்
உறவுராத பெண்ணை எண்ணி நாளெல்லாம் வாழ்கிறேன்

இது குழந்தை பாடும் தாலாட்டு
இது இரவு நேர பூபாளம்...

வெறும் நாரில் கரம் கொண்டு பூ மாலை தொடுக்கிறேன்
வெறும் காற்றில் உளி கொண்டு சிலை ஒன்றை வடிக்கிறேன்
விடிந்து விட்ட பொழுதில் கூட விண்மீனை பார்க்கிறேன்
விடிந்து விட்ட பொழுதில் கூட விண்மீனை பார்க்கிறேன்
விருப்பமில்லா பெண்ணை எண்ணி உலகை நான் வெறுக்கிறேன்

இது குழந்தை பாடும் தாலாட்டு
இது இரவு நேர பூபாளம்...

உளமறிந்த பின்தானோ அவளை நான் நினைத்தது
உறவுருவாள் எனதானே மனதை நான் கொடுத்தது
உயிரிழந்த கருவை கொண்டு கவிதை நான் வடிப்பது
உயிரிழந்த கருவை கொண்டு கவிதை நான் வடிப்பது
ஒரு தலையாய் காதலிலே எத்தனை நாள் வாழ்வது?

இது குழந்தை பாடும் தாலாட்டு
இது இரவு நேர பூபாளம்
இது மேற்கில் தோன்றும் உதயம்
இது நதியில்லாத ஓடம்
இது நதியில்லாத ஓடம்

# மிஸ்டர் பீன்

ரோவன் அட்கின்சன் என்றால் உங்களில் எத்தனை பேருக்கு யார் எனத் தெரியும்? ஆனால் Mr.Bean என்றால் அவரா என கண்டுபிடித்து விடலாம். பேச்சால் கட்டிப் போடும் பலரை நாம் பார்க்கலாம். ஆனால் பேசாமலே நம் மனதைக் கவரும் தன்மை கொண்டவர் அட்கின்சன். அவருடைய பிறந்த நாளான இன்று அவரைப் பற்றிய பத்து சுவாரஸ்யமான தகவல்களைப் பார்க்கலாம்.

1. கலைத் துறையில் ரோவன் அட்கின்சனுக்கு 'Rubber Face' என ஒரு பட்டப் பெயர் உள்ளது. அவர் நினைத்த நேரத்தில் நினைத்த பாவனையை முகத்தில் காட்டும் திறமை பெற்றதாலேயே இவ்வாறு அழைக்கப்படுகிறார்.

2. இங்கிலாந்தின் 'நியூகேசில்' பல்கலைக்கழகத்தில் எலக்ட்ரிக்கல் என்ஜினியரிங் முடித்திருக்கிறார். பின்னர் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டமும் பெற்றுள்ளார்.

3. அவர் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்த போது நடைபெற்ற விழா ஒன்றில் சைகை மொழி மூலம் நிகழ்ச்சி ஒன்றை நிகழ்த்திக் காட்டினார். அதற்கு அமோக வரவேற்பு கிடைத்துள்ளது. இந்த நிகழ்வே Mr.Bean கதாபாத்திரத்தின் தொடக்கம் என கருதப்படுகிறது

4. கல்லூரிப் படிப்பை முடித்த கையோடு பல்வேறு தொலைக்காட்சிகளில் வாய்ப்பு தேடிக் கொண்டிருந்த அட்கின்சனுக்கு 'Black Adder' என்ற ஒரு காமெடி தொலைக் காட்சி தொடரில் முக்கியமான கதாப்பாத்திரத்தில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. இந்த கதாபாத்திரம் இங்கிலாந்து முழுவதும் அவரது புகழைக் கொண்டு சென்றது.

5. நம்மையெல்லாம் மகிழ்ச்சியில் ஆழ்த்தும் Mr.Bean உடைய முதல் எபிசோட் 1995 டிசெம்பர் 15 ஆம் நாளில் I எனும் தொலைக்காட்சியில் ஒளி பரப்பப்பட்டது.

6. Mr.Bean கதாபாத்திரத்திற்கு முதலில் Mr.White, Mr. Cauliflower என்றெல்லாம் பெயர் வைக்க பரிந்துரை செய்யப்பட்டதாம். கடைசியில் Mr. Bean என்ற பெயரே அனைத்து மொழி மக்களாலும் உச்சரிக்க எளிதாக இருக்கும் என முடிவு செய்யப்பட்டது.

7. Mr.Bean கதாபாத்திரம் பெரும்பாலும் பேசாது. அப்படியே அது பேசினாலும் 'B'-ஒலியை உச்சரிப்பதாகவே இருக்கும். அட்கின்சனுக்கு திக்குவாய்ப் பிரச்சினை இருந்தாலேயே Mr. Bean கதாபாத்திரம் இவ்வாறு வடிவமைக்கப் பட்டதாக கூறுகிறார்கள்.

8. இவர் ஒரு முறை பேசும் போது, "நான் நடித்த கதாப்பாத்திரங்களில் நான் மிகவும் வெறுக்கக் கூடிய கதாபாத்திரம் Mr. Bean. ஏனெனில், அந்த கதாபாத்திரத்திற்கு எதிர் மாறாகவே நான் இருக்கிறேன். ஆனால் நான் அந்த கதாபாத்திரத்தில் நடிக்கும்போது மிகவும் சுதந்திரமாக உணர்வேன். மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை கண்டுகொள்ளாமல் விரும்புவதைச் செய்யும் சுதந்திரம் எனக்கு அப்போது தான் கிடைக்கும்" என்று கூறியுள்ளார்.

9. அட்கின்சனை ஒரு கார் காதலன் என்றே சொல்லலாம். தொலைக்காட்சி நிகழ்ச்சியான 'Top gear'-இல் கலந்து கொள்ளும் பிரபலங்களை கார் ஓட்ட வைத்து யார் முதலில் வருகிறார்கள் என பார்ப்பது வழக்கம். ஒருமுறை அட்கின்சன் டாம் குரூஸை பின்னுக்கு தள்ளி முதல் இடத்தைப் பிடித்தார்.

10. இவர் வருடம் வருடம் இறந்து விட்டார் என ஒரு வதந்தி பரவிவிடுமாம். பின்னர் வெளியே தோன்றியதும் அந்த வதந்தி மறைந்து விடும். இப்படி அடிக்கடி இறந்து நம்மை சிரிக்க வைக்கிறார் இந்த ரோவன் அட்கின்சன்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**ஆம், மனதை திடமும் பலமும் கொண்டதாக மாற்றிக் கொண்டால் பயத்தை பயன் உள்ளதாக மாற்றிக்கொள்ள முடியும். பயம் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்று ஆணிவேர் வரையிலும் சென்று அலச வேண்டும்.**

ஊரில் தங்கியிருந்த நண்பனுக்கு நிச்சயம் ஆபத்து ஏற்படும் என்று ஊர் மக்கள் தினமும் ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டே இருந்தார்கள். ஆனால், அவன் எந்த சிக்கலும் இல்லாமல் நிம்மதியாக இருந்தான். ஒரு வாரம் கழிந்த நேரத்தில் ஊருக்கு அந்தத் தகவல் வந்து சேர்ந்தது. ஆம், பேய்க்காக பரிகார பூஜை செய்வதற்காக ஓடிப்போன நண்பன், திடீரென செத்துவிட்டான். ஆம், பரிகார பூஜை முடிந்த பிறகும் யாரோ அவனை அழைப்பதாகச் சொல்லிக்கொண்டே இருந்திருக்கிறான். அதனால் திடுமென தூக்குப்போட்டு செத்துவிட்டான்.

இப்போது ஒருவன் உயிருடன் இருந்தாலும் இன்னொருவன் செத்த காரணத்தால், அந்த பேய்க் கிணறு மீது மக்களுக்கு முன்பைவிட அதிக பயம் வந்துவிட்டது. அந்தக் கிணற்றுக்குப் போகும் பாதையை நிரந்தரமாகவே மூடிவிட்டார்கள். இப்போது ஓர் உண்மை புரிந்திருக் கும். பயந்தவனுக்கு மரணம் நிச்சயம்.




# இருக்கிறதா... இல்லையா..?

**அப்படியென்றால் எதற்கும் யாருக்காகவும் பயப்படக் கூடாதா?**

பயம் இல்லாத மனிதர்கள் யாருமே இந்த உலகில் இல்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் ஏதேனும் ஒரு பயம் இருக்கும். பெரும்பாலான மனிதர்களுக்கு இருட்டு, பாம்பு, கரப்பான்பூச்சிகளைக் கண்டால் பயம். இரவு நாய் குரைத்தால் பயந்து நடுங்குபவர்கள் உண்டு. ஏதாவது ஒன்றைக் கண்டு பயம் ஏற்படுவதற்கு காரணம், சம்பந்தப்பட்ட விடயம் குறித்த தெளிவு இல்லை என்றுதான் அர்த்தம். இன்னொரு வகையில் சொல்வது என்றால் பயம் ஏற்படுவதற்குக் காரணம் மனிதனே.

**பயம் ஏற்படுவதற்கு மனிதன் எப்படி காரணமாக இருக்க முடியும்?**

சின்ன வயதில் ஆசிரியரைக் கண்டு பயப்படுகிறோம். அவர் அடிப்பார் என்று பயம் கொள்கிறோம். ஒழுங்காகப் படித்திருந்தால் ஒழுக்கமாக நடந்துகொண்டால் எந்த ஆசிரியருக்காகவும் பயப்பட வேண்டியதில்லை.

மேடை ஏறி பேசுவதற்கு பயம் கொள்வோம். அதற்கு பயிற்சி எடுத்திருந்தால் பயம் கொள்ள அவசியம் இல்லை. உயர் அதிகாரியைக் கண்டு பயப்படுகிறோம். மனைவியைக் கண்டு பயம். எந்தத் தவறும் செய்யவில்லை என்றால் அதிகாரியைக் கண்டும் மனைவியைக் கண்டும் பயப்படத் தேவை இல்லை. அதனால்தான் பெரும்பாலான பயம் ஏற்படுவதற்கு மனிதனே காரணமாக இருக்கிறான்.

**பயம் தேவையில்லாத ஒன்றா?**

அப்படியில்லை, பயம் சில நேரங்களில் மிகவும் அவசியமான உணர்வு. எதற்கு பயப்பட வேண்டும் எந்த நேரத்தில் பயம் தேவையில்லை என்ற தெளிவுதான் அவசியம். ஏனென்றால் உயிரைக் காப்பாற்ற பயம் தேவை. உயிருக்கு நேரும் ஆபத்தை எச்சரிக்கவும், தப்பிக்கச் செய்யவும் பயம் என்ற உணர்வு பயன்படுகிறது. சமையல் எரிவாயு கசிவதை உணர்ந்தவுடன் பயம் கொள்வது அவசியம். அப்போதுதான் ஜன்னலைத் திறந்து, கசிவை நிறுத்தி குடும்ப உறுப்பினர்கள் உயிரைக் காப்பாற்ற முடியும்.

ஏதேனும் ஒரு மிருகத்திடம் சிக்கிக்கொண்டால் உடனே பயம் வர வேண்டும். எப்படி தப்புவது என்று மூளை வேலை செய்ய வேண்டும். பயம் கொள்ளும்போது இரண்டு வகையான நிகழ்வுகள் ஏற்படுகின்றன. ஒன்று தப்புவது இரண்டாவது எதிர்த்து நிற்பது. இந்த இரண்டு உணர்வுகளும் மனித வாழ்வுக்கு இன்றியமையாதது. தேவையான இடத்தில் தப்பிக்கவும், தேவையான இடத்தில் எதிர்த்து நிற்கவும் தெரிந்திருக்க வேண்டும்.

**பயத்தை எப்படி எதிர்த்து நிற்பது?**

மனிதர்களுக்கு விதவிதமான பயம் இருக்கிறது. மருத்துவரீதியில் ஆயிரக் கணக்கான போபியா இருப்பதாகச் சொல்கிறார்கள். கறுப்பு நிறம், கடல், லிஃப்ட், நகரும் படிக்கட்டு, தனிமை, இடி, மழை என்று ஆளாளுக்கு வெவ்வேறு விதமாக பயம் உண்டாகிறது. அனைத்து பயங்களில் இருந்தும் மீண்டுவிட முடியும். ஆம், மனதை திடமும் பலமும் கொண்டதாக மாற்றிக்கொண்டால் பயத்தை பயன் உள்ளதாக மாற்றிக்கொள்ள முடியும். பயம் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்று ஆணிவேர் வரையிலும் சென்று அலச வேண்டும். ஒவ்வொரு பயமும் நாமே ஏற்படுத்திக் கொண்டது என்பது புரியவரும். இந்த உண்மை அறிந்துகொண்டால் நம்மைக் கண்டு பயமே பயந்துவிடும்.

(முற்றும்.)

# தை பிறந்தால் வழிபிறக்கும்

**தை** பிறந்தால் வழி பிறக்கும் என்பது பழமொழி. தை மாதம் தொடங்கினாலே சுப நிகழ்ச்சிகள் களைகட்டத் தொடங்கிவிடும். தை மாதத்தின் தொடக்கமே பொங்கல் பண்டிகையாகக் கொண்டாடும் வழக்கம் நம் மரபில் உண்டு. இந்தியாவின் பெரும்பாலான மாநிலங்களில் தை முதல் நாளைப் பண்டிகையாகக் கொண்டாடுவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக சூரிய நாட்காட்டியை அடிப்படையாகக் கொண்டு மாதங்களைக் கணக்கிடும் மாநிலங்களில் இந்த நாள் முதன்மையான பண்டிகையாகத் திகழ்கிறது. அந்த வகையில் தமிழகத்தில் சூரியபகவான் மகர ராசிக்குள் பெயர்ச்சியாகும் தை முதல் நாளை சூரியனை வழிபட உகந்த நாளாகக் கொண்டாடி மகிழ்கிறோம்.

உழவுத் தொழிலுக்கு உறுதுணை செய்பவர் சூரிய பகவானே. கண்கண்ட கடவுளான சூரியனின் ஆற்றலே மழை பொழியவும் நிலம் செழிக்கவும் பயிர் விளையவும் உயிர்கள் வாழவும் காரணமாகிறது. அப்படிப்பட்ட சூரிய பகவானுக்கு நாம் நன்றி செலுத்தும் விதமாகக் கொண்டாடப்படும் பண்டிகையே பொங்கல் பண்டிகை.

சூரியனின் நகர்வை அடிப்படையாகக் கொண்டே தமிழ் மாதங்கள் கணக்கிடப்படுகின்றன. அந்த வகையில் சூரியன் காலச் சக்கரத்தின் முதல் ராசியான மேஷ ராசியில் பிரவேசிக்கும் காலத்தில் ஆண்டு தொடங்கும். இந்த ஆண்டை உத்தராயனம், தட்சிணாயனம் என இரண்டாகப் பிரிக்கிறார்கள். தை முதல் ஆனி வரையிலான மாதங்கள் உத்தராயனம் என்றும் ஆடி முதல் மார்கழி வரையிலான ஆறு மாதங்கள் தட்சிணாயனம் என்றும் அழைக்கப்படுகின்றன. நமக்கு ஓர் ஆண்டு என்பது தேவர்களுக்கு ஒரு நாள் என்பது நம்பிக்கை.

உத்தராயனம் தேவர்களின் பகல் பொழுது என்றும் தட்சிணாயனம் இரவுப் பொழுது என்றும் புராணங்கள் சொல்கின்றன. அந்த வகையில் தேவர்களின் பகல் பொழுதின் தொடக்கமான தை மாதத்தின் தொடக்கமே மகர சங்கராந்தி. சங்கராந்தி என்றால் நகர்தல் என்று பொருள். சூரியன் தனுசு ராசியில் இருந்து மகர ராசிக்குள் நகர்வதால் இந்தப் பெயர் ஏற்பட்டது.

தை முதல் நாள் பொங்கல் பண்டிகை அன்று சூரியனை வணங்கிப் பொங்கலிட்டு கரும்பு, பழங்கள், வெற்றிலை ,பாக்கு ஆகியன வைத்து வழிபட வேண்டும். வீட்டில் சூரிய ஒளிபடும் ஏதேனும் ஓரிடத்தில் இந்த வழிபாட்டைச் செய்வது மிகவும் சிறப்பு.

பூஜை செய்யும் இடத்தில் சந்திர, சூரியர்கள் கோலம் இட்டுக்கொள்ள வேண்டும். பொங்கல் பானையை நடுவே வைத்து சூரியனுக்கு தீபாராதனை காட்டி பின் நிவேதனம் செய்ய வேண்டும். பொதுவாக சர்க்கரைப் பொங்கல் செய்வதுவே வழக்கம். சில வீடுகளில் வெண்பொங்கலும் சேர்த்து செய்வார்கள்.

சூரிய பகவானைக் கண்டு வணங்குவதோடு பின்வரும் மந்திரங்களையும் சொல்லித் துதிக்கலாம்.

ஓம் மித்ராய நம: ஓம் ரவயே நம:
ஓம் சூர்யாய நம: ஓம் பாநவே நம:
ஓம் ககாய நம: ஓம் பூஷ்னே நம:
ஓம் ஹிரண்யகர்பாய நம: ஓம் மரீசயே நம:
ஓம் ஆதித்யாய நம: ஓம் ஸவித்ரே நம:
ஓம் அர்காய நம:
ஓம் பாஸ்கராய நம

இந்த மந்திரங்களை தைப்பொங்கல் நாளில் எத்தனை முறை சொல்கிறோமோ அவ்வளவு நன்மைகள் கைகூடும். சூரியன் ஆரோக்கியத்தின் அதிபதி. எனவே சூரிய வழிபாடு செய்வதன் மூலம் நம் ஆரோக்கியம் பெருகும். முன்னோர் ஆசி கிட்டும். இந்தப் பொங்கல் பண்டிகை அனைவருக்கும் சகல நலன்களையும் தரும் திருநாளாகத் திகழ வலம்புரி நாளிதழ் சார்பில் உங்கள் அனைவருக்கும் பொங்கல் நல்வாழ்த்துகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## ஆனந்த பொங்கலிது

முற்றமதில் கோலமிட்டு முன்றடுப்பில் பொங்கலிட்டு
முற்றிய கரும்புடனே முக்கனியும் சேர்ந்தினிக்க
கற்பூரம் சாம்பிராணி காற்றோடு மணம் பகர
கற்றோரும் மற்றோரும் கதிரவனை கரம் கூப்பி
சக்கரையும் தேனூற செய்களுடன் இந்நாளில்
சுற்றமுடன் சேர்ந்துண்ணும் சிறப்பான திருநாளாய்
அற்புதமாய் இவ்வாண்டில் அமைதியாய் நாம் வாழ
இந்நாளை மகிழ்வுறும் பொங்கலோ பொங்கல்

கலாபூசணம் கே.ஆர். திருத்துவராஜா.

## உளம் மகிழும் பெருநாளே உழவர் திருநாளே



உழுதுண்டு வாழ்பவர் மட்டுமே உண்மையாய்
வாழ்கின்றார் என்றே-மற்றோர்
தொழுதுண்டு அவர்பின்னே செல்பவர் என்றார்
வள்ளுவனார் அன்றே
விழுதாகி உலகெனும் விருட்சத்தை தாங்குவது
உழவுத்தொழில் ஒன்றே-என்றும்
முழுமுதல் கடவுளாய் உணவிடும் உழவனையே
தொழுதிடுவோம் இன்றே

உழுது பண்படுத்தி உடல்வருத்தி வயல்திருத்தி
உயர்க நெல்விதைத்து-வான்
மழையும் கதிரவனால் தேன்மாரி பொழிந்து
பயிர்விளைய வழியமைத்து - பயிர்
முளைத்துயர களையகற்றி
முழுப்பயிராய் வளரவைத்து
புதிரெடுத்து கதிரறுத்து
மலையெனநெல் மணிகுவித்து
வளம்பெருக வைத்த செங்
கதிரவனைப் பூசித்து
விளைந்த நெல் அரிசியிலே வெல்லமுடன் பாலுமிட்டு
பொங்கலாக்கிப் படைத்து-நம்
உழவரித் திருநாளில் உளம்மகிழ்வார்
நன்றிமிகு உணர்வினை அர்ப்பணித்து

டே.த. எட்வின்,
உடுவில்.

## பொங்குவோம் வாரீர்!

ஏர்பூட்டி உழுது பயிர் நாட்டி
ஏழ்மையைப் போக்கும் ஏர்குடி மக்கள்
பரந்தொளி பரப்பும் பகலவனுக்கு படைத்துபின்
பாசமிகு உறவுகளோடு பகிர்ந்துண்ணும் நல்நாள்
அரும்பும் இளஞ்சிறார்கள் சிறிதும் அச்சமின்றி
அரும்பணிகள் ஆற்றி வாழ ஆதரவு தருவாயம்மா
வறுமை நிலை நீங்கி வளமுடன் வாழ
தருவாயே வரம் தைத்திருமகளே


கலாபூசணம்.மு. தனிகாசலம்,
கரவெட்டி.



## மௌனத்தின் தேடல்-698



### மிஞ்சம்



திரை மறைவில் திணறடிக்கும்
தீர்க்கதரிசிகள் தேசமிது
திடமும் தெளிவும் இல்லையேல்
திண்ணைக்கு மண்ணாய் போவாய்
உன் திருமுகம் மறைத்தல்
இத்தெருவழிக்கு பலர் ஒப்பனை
நமக்கான முகமூடி வெளிச்சத்தில்
இருளில் தேடி பொழுதை ஒளிக்கிறது
உலகம் கவனம் குழந்தாய்

யாழ் வாகீஷ்

### முகம் மாறும் அரக்கர்



உண்மை முகமெங்கள்
பொல்லா குரூரர் நாம்
திருட்டும் புரட்டும் நிதம்
கொடுமைகள் புரிந்து
அதை மறைக்க
நல்லோராய் முகமூடியணிந்து
மற்றோரை குற்றவாளியென
கதை விடுகின்றோம்
உத்தமர் போல்

சி.இ.அன்புதுரை, மானிப்பாய்.

### முகமூடி வேண்டாம்

முகமூடி அணிந்து பஞ்சமாபாதகச்
செயல்புரியும் வஞ்சகத்தன்மையை
விலக்கிவிடு மகளே!
நமது அன்பான சமுதாயமே
முகமூடியை உடைத்தெறி
உன்னதமாக நீதி நிலைத்து
நிற்க வழிதேடு
வளரும் பருவத்தினருடன்
விளையாடாதே முகமூடி
உன் விளையாட்டிற்கு
காலம் பதில் சொல்லும்

அபிஇலமாலிகா, சித்தன்கேணி.

### இரட்டை வேடம்



எண் சாண் உடம்பிற்கு
என்றும் சிரசே பிரதானம்
இதனால் அலங்காரங்களும்
அபிஷேகங்களும் அமோகம்
உயிரைக் காக்கத் தலைக்கவசம்
முகக்கவசம் கொரோனாவைத் தடுக்க
இவற்றுடன் முகமூடிகளின் வருகை
அகத்தைவெளிக்காட்டாதிருக்க
அழைக்காமலே வரும் ஆபத்தைத் தடுக்க
நாட்டை இருட்டிற்குள் தள்ளும்
இரட்டை வேடங்கள் சமூகத்திலும்
அரசியலிலும் இணைந்துவிட்டன

க.நாகராசா, புணாவில்.

### என்ன செய்வாள்!

புத்தகப் பைக்குள் கூடவே
ஒரு குடிநீர்ப் போத்தல்
சத்தான பழரசப் பானி
கொண்டுவரும் உன்
அன்புக் கல்லூரித் தோழி
நீ அகங்கையால் அள்ளி
நீர் அருந்தும் காட்சி கண்டால்
உன்னை அணைப்பாளா!
இல்லை அகம்பாவம் கொள்வாளா?

பி.யதுர்சன், கொக்குவில்.

### நீறாக்கவா!

கண்ணகி விரித்த கூந்தல்
கனலாய் எரித்தது மதுரையை
திரௌபதை குலைத்த கூந்தல்
குருசேத்திரப் போராய் முடிந்தது
இன்று நீ கலைத்த கூந்தல்
முகமூடி ஆண்களை நீறாக்கவா!

பிரமனி, கொக்குவில்.



### முகத்தை மூடு

பெண்ணின் இயல்பு இன்னதென்று
மண்ணில் யாரும் சொன்னதில்லை
எண்ணில் எதையும் முடிப்பாய் பெண்ணே
கண்ணில் தோன்றும் கனல் காந்தம்
மின்னாக மாறும் முன்பே முகத்தை மூடு

பி.மதுஷ்சன் தையிட்டி.

## மௌனத்தின் தேடல்- 699



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம்,
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா




காலத்தின் பதிவு 92

## உடைந்த கவசம்

“என்ன? திருமணத்தையா?”

“இல்லை உங்கள் மரணத்தை.”

“என் மரணத்தில் என்ன அவர்களுக்கு அத்தனை திருப்தி?”

மஞ்சளழகி மேற்கொண்டு பேசமுடியாமல் திணறினாள். அதுவரை அவனைப் பார்த்துப் பேசிய அவள் தன் இரு கைகளிலும் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். ‘என்ன திருப்தி என்று கேட்கிறாரே! எப்படிச் சொல்லுவேன்!’ என்று ஏக்கர் பெருமூச்சு விட்டாள்.

அந்தப் பெருமூச்சைத் தொடர்ந்து தயங்கித் தயங்கித் துக்கம் குரலில் அலைபோமதப் பேசினாள். “இளையபல்லவரே! உமக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டால் வெட்டுப் பாறைக்கு உம்மை அழைத்துச் செல்ல மாட்டார்கள். அதே அந்தப் பதக்குகளின் கொடிமரத்துக்கு அழைத்துச் சொல்லுவார்கள். அழைத்துச் சென்று...” என்று சொல்லிக் கொண்டே போன அவள் குரல் கம்மியது.

“அஞ்சாதே! சொல் மஞ்சளழகி,” என்றாள் இளைய பல்லவன் “அழைத்துச் சென்று தூக்கிலிடுவார்களா?” என்று கேட்டான்.

“அதுவும் அத்தனை கோரமல்ல...” என்று தேம்பினாள் அவள்.

இளைய பல்லவனின் இதயத்தில் அத்த ஏந்தியமைழயின் துக்கத்தைக் கண்டு பரிதாபம் பெருக்கெடுத்து ஓடியது. அவளை மீண்டும் தன்னருகில் இழுத்தான். “சொல் மஞ்சளழகி, சித்திரவதைக்கு அஞ்சாதவன் நான்” என்று ஆதரவாகப் பேசவும் செய்தான்.

“அந்தக் கொடி மரத்தில் கட்டுவார்கள். அந்தக் கொடி மரம் பதக் சாதியாருக்குச் சொந்தம், ஆகவே அதில் கட்டப்படுபவர்களும் அவர்களுக்குச் சொந்தம்...” இதைச் சொன்ன மஞ்சளழகி லேசாக நடுங்கினாள்.

“என் உடல் அவர்களுக்குச் சொந்தமாகிவிடும் அவ்வளவுதானே?” என்றான் இளையபல்லவன்.

அவள் திடீரென்றுத் தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள். அவள் கண்களில் நீர் நிரம்பி நின்றது. “இளைய பல்லவரே, பதக்குகள் நரமாமிசம் புசிப்பவர்கள். ஆகவே உமது உடல் சின்னாபின்னப்படுத்தப்படும். அந்தக் கொடி மரத்தில் உம்மைக் கட்டியதும் அக்ஷயமுனைக் காவலர் அகன்றுவிடுவார்கள். ஆயிரக்கணக்கான பதக்குகள் உம்மைச் சூழ்ந்துகொள்வார்கள். ஒவ்வொருவரும் உமது உடலின் ஒவ்வொரு புறத்தில் தசையைக் கத்தியால் அறுத்து எடுத்துக் கொள்வார்கள். கழுகுகள் உடலைக் குத்தினால் கூட ஏற்படாத இம்சை உங்களுக்கு ஏற்படும். உயிர் சிறிது சிறிதாகத்தான் போகும். உடலும் சிறிது சிறிதாகத்தான் அழியும். குருதியை அவர்களில் சிலர் வாய் வைத்துக் குடிப்பார்கள். இந்தக் கோரத்துக்குப் பூர்வாங்கமாகக் கண்கள் தோண்டப்படும். மிகப் பயங்கரம்! மிகப் பயங்கரம்!”

என்று திணறினாள் மஞ்சளழகி.

இளைய பல்லவன் கூடத் தனக்கு ஏற்படக்கூடிய அந்த விபரீத மரணத்தைக் குறித்து அச்சத்தின் வசப்பட்டான். அதுவரை அவன் கேட்டுமிராத அந்தக் கொடுமையை எண்ண எண்ண அவன் உள்ளம் நடுங்கியது.

“வாளேந்திப் போரிட்டு அடையும் வீரமரணம் வேறு, மனிதர் மனிதனை அறுத்துத் தின்று குதூகலிக்கும் இந்தப் பயங்கர மரணம் வேறு.” என்று நினைத்த அவன் தீவிர சிந்தனையில் இறங்கினான். கடைசியில் கேட்டான். “ஆம் மஞ்சளழகி! இது பயங்கரப் பழக்கம்தான். இத்தகைய தண்டனையை நீ முன்பு பார்த்திருக்கிறாயா?” என்று.

“பார்த்ததில்லை. இரண்டொரு சமயம் இப்படி நடந்திருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன்.” என்றாள் மஞ்சளழகி.

“உன் தந்தை எதற்காக இத்தகைய பயங்கர மரணத்தை எனக்கு அளிக்கப் பார்க்கிறார்?” என்று வினவினான் இளைய பல்லவன்.


“நீங்கள் மணம் செய்து கொண்டாலும் அவருக்கு லாபம், மரணம் அடைந்தாலும் லாபம்” என்றாள் அவள்.

“மரணமடைந்தால் என்ன லாபம்?” “நீங்கள் பூர்வக்குடியினரில் ஒருவனைக் கொன்று விட்டீர்களல்லவா?”

(தொடரும்...)

# நான் வைரமுத்து பேசுகிறேன்... 38

## பாரதியின் பின்புலங்கள்



மானிடக் காதலியை வருணிக்கும் ஷெல்லி காதலியின் கண்களை.

“அந்த ஆழமான கண்கள். அவை இரட்டைக் கிரகங்கள்.” என்கிறான்.

பாரதியும் இதே படிமத்தில்,

**“சுட்டும் விழிச்சுடர் தான்-கண்ணம்மா**
**சூரிய சந்திரரோ!”**

என்று பாடும்போது, ஷெல்லியின் பாட்டிலில்லாத உட்தொனி, பாரதி பாட்டில் படிந்து கிடக்கிறது.

மாலைப் பொழுதிலொரு மேடை மிசையே வானையும், கடலையும் நோக்கிக் காத்திருக்கிறான் காதலன்.

ஏழை ஆன்மா இறைமைக்காகக் காத்திருக்கிறது. பின்னால் வந்து கண் பொத்தப்படுகிறது. ஆன்மாவின் கண்ணை மாயை மறைக்கிறது. கையை விலக்கிக் காதலன் காதலியைக் காண்கிறான். மாயை விலக இறையுருவம் தெரிகிறது.

காதலியையன்றி இன்கோர் உருவம் காதலனின் கண்களிலில்லை .

மாயை அகன்ற ஆன்மாவிற்கு இந்தப் பேரண்டத்தில் இறைவன் உருவன்றி இன்னோர் உருவில்லை.

இப்படித் தத்துவப்படுத்திக் கொள்வதற்குச் சமயவாதிகளுக்கு வாய்பிருக்கிறது.

எளிய எண்சீர் விருத்தத்தில் இவ்வளவு பெரிய தத்துவம் குடியேறி விடுகிறது.

**“நெரித்த திரைகடலில் நின் முகங் கண்டேன்**
**நீல விசும்பினிடை நின் முகங் கண்டேன்**
**திரித்த நுரையினிடை நின் முகங்கண்டேன்**
**சின்னக் குமிழிகளில் நின் முகங் கண்டேன்**
**பிரித்துப் பிரித்துநிதம் மேகமளந்தே**
**பெற்றதுன் முகமன்றிப் பிறிதொன்றில்லை**
**சிரித்த ஒலியினில் உன் கைவிலக்கியே**
**திருமித் தழுவியதில் நின் முகங் கண்டேன்.”**

என்ற ஆன்மக் காதலின் அடி மனப் பேச்சு பாரதியின் காதலனால் உள்ளார்ந்த தத்துவ ஒலி பெறுகிறது.

காதலி கண் புதைத்தலும், கை விலக்கலும் சங்க இலக்கியத்திலேயே பாடப்பட்டவைதாம்.

**“சிலம்பிகமழ் காந்தணறுங் குலை யன்ன**
**நலம்பெறு கையினென் கண் புதைத் தோயே**
**பாய லின்றுணை யாகிய பணைத் தோட்**
**தோகை மாட்சிய மடந்தை**
**நீயல துளரோவென் நெஞ்ச மர்ந் தோரே.”**

(நற்றிணை 243 ஆம் பாடல்”)

இந்த இருபாடல்களிலும் பாடப் பெறுவன கண்புதைத்தலும், கை விலக்கலுமாகிய காதல் நிகழ்ச்சிகளே.

ஆனால், நற்றிணையில் இந்த நிகழ்ச்சிகள் மனிதக் காதலை விளக்கும் கவிதைக்குக் கருவிகளாகின்றன.

பாரதியின் பாட்டிலோ தெய்வக் காதலை தத்துவப் புதையலை விளக்கும் கவிதைகளாக மாற்றம் பெறுகின்றன.

**“ஆண்டாளுடைய பாசுரங்களைப் போலச் செயிரின்றி இப் பாவத்தை பாடுவது அநேகமாய் அசாத்தியம். நமது கவியும் இப் பாவத்தை விரிக்கையில் பரபக்தியை விடச் சரீரமான காதலையே அதிகமாக வர்ணித்திருக்கிறார்.!”**

(கண்ணன் பாட்டு-முன்னுரை)

என்று வ.வே.சு அய்யர் அவர்கள் குறித்தாலும் சரீரக் காதலை இறை உறவுக்குரிய ஒரு குறியீடாகப் பயன்படுத்தியதில் முழு வெற்றி கண்டவன் பாரதியே.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

381

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## முதியோர் விழுவதால் ஏற்படும் சுகாதாரப் பிரச்சினைகள்

வாழ்க்கையில் சறுக்கி விழுவோர் பலர். இவர்கள் இளைஞர்களாகவே உள்ளனர். ஆனால் முதியோர் மத்தியில் அதாவது அறுபத்தைந்து வயதிற்கு மேற்பட்டோரில் பலர் விழுகின்றனர். ஆண்டு தோறும் முதியோர் விழும் நிகழ்வுகள் அதிகரித்துச் செல்கின்றது. இந்த அதிகரிப்பானது முதியோரின் தொகை அதிகரிப்பை கோடிட்டுக் காட்டுகின்றது.

சுமார் 10-20 விதமான விழுதல்களில் காயங்கள் ஏற்படுகின்றன. பெரிய விளைவுகளை ஏற்படுத்தும் காயங்களாக எலும்பு முறிவுகள், மூட்டு விலகல்கள், பெரிய தலைக் காயங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். 65 வயதிற்கு மேற்பட்டோரிடம் காணப்படும் மூளைக் காயங்கள் பெரும்பாலும் விழுதலினால் ஏற்படுகின்றன. இவை அனைத்தும் ஒருவரை ஆரோக்கிய மற்ற உடல் நிலைக்கு தள்ளி விடுகின்றன. விழும் நோயாளர்களில் பெரும்பாலானோர் சுயமாக மீண்டும் எழ முடியாது தவிர்க்கின்றனர். இதனால் நீண்ட நேரம் நிலத்தில் வீழ்ந்து கிடந்த பின்னரே அவர்களால் உதவி பெற முடிகின்றது. இந்த தாமதம் பயங்கர விளைவுகளை ஏற்படுத்தக் கூடும்.

உடல் மெலிவானோர், கூடிய உயரமுடையோர் பாரிசவாதத்தால் பீடிக்கப்பட்டோர், எழும்பில் தாதுச்சத்தின் அடர்த்தி குறைவானோர் பொதுவாக விழுதலுக்கான ஏதுக்களாக உள்ளன. குறைவடைந்த தசைத் தொகுதி, புவியீர்ப்பில் ஏற்படும் மாற்றங்கள் பார்வைக் குறைபாடு, எதிர்தாக்கத்திற்கு எடுக்கும் அதிக நேரம் என்பன வயது மாற்றங்கள் ஒருவர் விழுவதற்கு இட்டு செல்லும் இயற்கையான காரணிகளாகக் குறிப்பிடலாம். சில மருந்து வகைகளால் ஏற்படும் பக்க விளைவுகள், பல்வேறு வகையான மருந்து வகைகளை உரிய காரணமின்றி பாவித்தல், சூழல் இடையூறுகள், உதாரணமாக படிக்கட்டுக்கள், சமனற்ற நடைபாதைகள், பளபளப்பான நிலம், தடித்த தரை விரிப்புகள், மற்றும் பொருத்தமற்ற பாதணிகளை தெரிவு செய்தல் போன்றன நம்மால் தவிர்த்துக் கொள்ளக்கூடிய சில காரணிகள் ஆகும்.



### விழுதலால் ஏற்படும் விளைவுகள்

விழுதலினால் ஒருவரின் சுயமரியாதைக்கு தாக்கம் ஏற்படுவதோடு, ஒரு தனி மனித சுதந்திரத்தையும் பாதிக்கின்றது. அத்துடன் விழுந்து விடுவேன் என்ற பயத்தையும் நோக்கங்களைத் தாங்கும் சக்தியின் வீழ்ச்சியும் காலக்கிரமத்தில் எழுந்து நடமாடமுடியாத நிலையையும் பலவீனத்தையும் ஏற்படுத்தும். இவையனைத்தும் ஒருமனிதனை சமூகத்திலிருந்து தனிமைப்படுத்துவதாக அமையும்.

### சிகிச்சையும் விழுதலை தடுப்பதற்கான உத்திகளும்

விழுவது பற்றிய கல்வி, தேகப்பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், சூழலை மாற்றியமைத்தல் போன்றன வெற்றிகரமான புனரமைப்புக்குரிய தந்திரோபாயங்களாகும்.

புனர்நிர்மாணத்தின் பூரண அணுகுமுறை விழுந்த ஒரு நோயாளியின் நிலையை முன்னேற்றம் குறைவான அபிப்பிராயங்களை உடையோரை மதிப்பீடு செய்து அவர்களை வைத்திய சிகிச்சைக்கு உட்படுத்த வேண்டும். காலத்துக்கு காலம் நோயாளியின் மருந்துகளை மதிப்பீடு செய்தல் மிக முக்கியம்.

குளியலறை வெளிச்சத்தை எப்பொழுதும் எரிய விடுவது, படுக்கைக்கு அருகில் கழிப்பறை அமைத்தல், எப்பொழுதும் நோயாளியைக் கண்காணிக்கும் வகையில் அவரை அறைக்கு வெளியே படுக்க விடுதல், சக்கர நாற்காலியில் நோயாளி அமர்ந்திருக்கும் பொழுது பட்டியொன்றினால் அவரைச் சுற்றி பாதுகாத்தல், படுக்கையின் பக்கங்களை உயர்த்தி வைத்தல் போன்ற நடவடிக்கைகளால் நோயாளி விழுவதைத் தடுக்கலாம்.

### பொதுவான பாதுகாப்பு முறைகளையும் பின்பற்றலாம்.

உதாரணமாக படுக்கையின் உயரத்தைக் குறைத்தல். நோயாளியின் அறையையும் சூழலையும் நீரின்றி வைத்திருத்தல். சக்கர நாற்காலியை எப்பொழுதும் பூட்டி வைத்திருத்தல், மேசை தொலைபேசி போன்றவற்றை நோயாளியின் கைகெட்டிய தூரத்தில் எப்பொழுதும் வைத்திருத்தல் போன்றனவாகும்.

இடம் மாற்றம் செய்யும் பொழுது பொருத்தமான நடைமுறைகளைக் கையாளுதல், வீடுகளில் காணப்படும் ஆபத்தை விளைவிக்கும் ஏதுக்களை தவிர்த்தல், உதாரணமாக மேடு, பள்ளமான தரையை சமனாக்கல், படிகளுக்கு பதிலாக சரிவான தரையைப் பயன்படுத்தல், படிக்கட்டுக்களின் வெளி விளிம்பில் நிறமூட்டிய நாடாவை பதித்தல், நூல் தரை விதிப்புக்களை பயன்படுத்தல், நல்ல வெளிச்சத்தைப் பேணல், குளியலறைகளில் கைப்பிடிகளை அமைத்தல், கழிப்பறை இருக்கைகளை உயர்த்தி வைத்தல் போன்றன விழுதலை தடுக்கும் ஏனைய உத்திகளாகும்.

எனவே வயதானவர்களில் ஏற்படும் விழுதலும் அதனால் ஏற்படும் பாரதூரமான விளைவுகளும் மேற்கூறிய உத்திகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் பெரும்பாலும் தவிர்த்துக் கொள்ளலாம்.

வா.சுஜநிதா,
பொது வைத்திய நிபுணர்.



புதிய திரைப்படம்

ஈழத்து கலைஞர்களுக்கான அழைப்பு!

தூவானத்தைத் தொடர்ந்து...

நித்திலம் தயாரிப்பில் வெளிவர இருக்கும் புதிய திரைப்படத்தில் இணைந்து பணியாற்ற ஆர்வம் உடையோர், சுயவிபரங்களுடன் 31.01.2024இற்கு முன் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு அழைத்து நிற்கின்றோம்.

Assistant Directors
Art Directors

Dubbing Artists
Makeup Artists
Actors

Music Directors
Singers

Promotion Coordinator
Subtitle Artists

Cinematographer
VFX, AFX Artists
போன்ற வேறு கலைஞர்களும்...

நித்திலம் கலையகம்

தொடர்புகளுக்கான மின்னஞ்சல் முகவரி
thamilhealth@gmail.com

சுயவிபரங்கள்
தொலைபேசி இலக்கம்
என்பவற்றை இணைத்து

31.01.2024 முன் அனுப்பி வைக்கவும்.

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன நிலக்கரி சுரங்கத்தில் விபத்து
# 8 பேர் பலி; 8 பேர் மாயம்



(பீஜிங்)

மத்திய சீனாவின் ஹெனான் மாகாணத்தில் உள்ள பிங்டிங்ஷான் நகரில் உள்ள நிலக்கரிச்சுரங்கம் ஒன்றில் விபத்து ஏற்பட்டுள்ளது.

நிலக்கரி மற்றும் எரிவாயு வெடித்ததால் விபத்து ஏற்பட்டுள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த விபத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

விபத்து நடந்தபோது மொத்தம் 425 பேர் நிலத்தடியில் வேலை செய்து கொண்டிருந்ததாகவும் அவர்களில் 380 பேர் அப்போதே சுரங்கத்தில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. மீதமுள்ள 45 பேரில் 8 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 8 பேரை காணவில்லை எனவும் தகவல் வெளியாகி உள்ளது. காணாமல் போன 8 பேரை மீட்க மீட்புப்பணிகள் நடைபெற்று வருகின்றன. (நி)

# ஹவுதி கிளர்ச்சியாளர்களின் ராடர்களை அழித்த அமெரிக்கா

(வோஷிங்டன்)

ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்களின் ராடர் நிலைகளை இலக்குவைத்து அமெரிக்கா மீண்டும் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது.




அமெரிக்கா யுஎஸ்எஸ் கார்னே என்ற போர்க்கப்பலில் இருந்து டொம்ஹவ்க் ஏவுகணைகளை பயன்படுத்தி இந்த தாக்குதலை அமெரிக்கா மேற்கொண்டுள்ளது.

செங்கடல் பகுதியில் வர்த்தகக் கப்பல்கள் உட்பட கப்பல்களை தாக்குதவற்கான ஹவுதி கிளர்ச்சியாளர்களின் பலத்தை அழிப்பதற்காக நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் தொடர்ச்சியே இந்த தாக்குதல்கள் என தெரிவித்துள்ள அமெரிக்கா நவம்பர் 19 ஆம் திகதி முதல் ஈரான் சார்பு ஹவுதி கிளர்ச்சியாளர்கள் 28 தடவை செங்கடல் பகுதியில் கப்பல்கள் மீது தாக்குதல்களை மேற் கொண்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளது. (நி)

# அமெரிக்காவை அச்சுறுத்தும் புயல்
# 2000 விமான சேவைகள் ரத்து

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் சிகாகோ உள்ளிட்ட நகரங்களில் கடுமையான புயல் தாக்கம் ஏற்பட்டுள்ளது.


இதன்காரணமாக நேற்று முன்தினம் பல விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அங்கு 75 கிலோமீற்றர் வேகத்தில் புயல் காற்று வீசுவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

புயல்த் தாக்கத்தினால் ஏராளமான குடியிருப்புகள் சேதமடைந்துள்ள நிலையில், மின் விநியோகமும் துண்டிக்கப் பட்டுள்ளது.

இந்தநிலையில், சிகாகோ விமான நிலையம் உள்ளிட்ட பல விமான நிலையங்களின் விமான சேவைகள் பாதிப்படைந்துள்ளன. இதுவரையில் சுமார் 2,000 விமானங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி)

# உக்ரைனுக்கான உதவியை அதிகரித்தது பிரித்தானியா



(லண்டன்)

உக்ரைனுக்கு அடுத்தாண்டு 2.5 பில்லியன் பவுண்ட் இராணுவ உதவியை பிரித்தானியா வழங்கும் என பிரதமர் ரிஷி சுனக் அறிவித்துள்ளார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு தொடங்கியதை அடுத்து அந்நாட்டுக்கு வழங்கப்படும் பிரித்தானியாவின் மிகப்பெரிய அறிவிப்பு இதுவென்றும் கூறப்பட்டுள்ளது.

நீண்ட கால பாதுகாப்பை ஆதரிக்கும் புதிய ஒப்பந்தத்தில் பிரதமர் ரிஷி சுனக் கையொப்பமிடுவர் என்றும் இந்த தொகுப்பு உக்ரைனுக்கு பெரும் உதவியாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நிதியுதவியில் நீண்ட தூர ஏவுகணைகள், வான் பாதுகாப்பு மற்றும் பீரங்கி குண்டுகளை பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேநேரம் 200 மில்லியன் பவுண்ட் சில ஆளில்லா விமானங்களுக்காக செலவிடப்படும் என்றும் அவற்றில் பெரும்பாலானவை பிரித்தானியாவில் தயாரிக்கப்பட்டவை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## இன்று ஒரு தகவல் 05



தென்கச்சி கோசுவாமிநாதன்

# வாழ்வின் பொருள்

சொல்வது ஒன்று செய்வது ஒன்று என்கிறது இந்தக் காலத்திலே ரொம்ப சகஜமாகிவிட்டது! வாக்குறுதி கொடுப்பதற்கு நிறைய பேர் இருக்கிறார்கள். அதை நிறை வேற்றுவதற்குத் தான் ஆள் இருக்காது! குடுத்த கடனை திருப்பிக் கேட்கப் போனால் நான் எப்பவாங்கினேன் என்கிறான்! இவன் எங்கே கொடுத்த வாக்கை காப்பாற்றப் போகிறான். பெரியவர்கள் எல்லாம் இப்படி இல்லை... சொன்னா சொன்ன படி நடந்து கொள்வர். அவர்கள் எல்லாம் வாக்கு கொடுத்தா கொடுத்ததுதான்! என்ன வந்தாலும் அவங்க அதை மீற மாட்டார்கள்! கர்னாடக சங்கீத உலகத்திலே தியாகரா ஜரைப்பற்றி தெரியாதவர்கள் இருக்க முடியாது! அபூர்வ ராகங்கள்லே பல மேன்மையான கிருதிகளைப் படைச்சவர் அவர்.

ஆனந்தபைரவி ராகத்துலே அவர் மூன்றே மூன்று பாட்டுத் தான் எழுதியிருக்கார். அதுக்கு மேலே அவர் ஏன் எழுதவில்லை, இதுக்குக் காரணம் என்னவா இருக்கும் என்பது கர்னாடக சங்கீதம் படித்த பலபேருக்கு ஏற்படுகிற ஒரு சந்தேகம். இதுக்குப் பதிலை தேட முயற்சி செய்த போது ஒரு தகவல் கிடைத்தது. தகவல் என்று ஒன்று கிடைத்த பின்பு அதை உங்கள் காதிலே போட்டு வைக்க வில்லை என்றால் எப்படி? அந்த காலத்திலேயெல்லாம் சங்கீதம் பாடகிறவர்கள் ஒவ்வொரு ராகத்துலே "ஸ்பெஷ லிஸ்ட்"டா இருக்காங்க! அந்த ராகமே அவங்களுக்கு அடைமொழியாகி விடுகிறது ண்டு. இந்தவகையிலேதான்.. "அடாணா"அப்பய்யான்னு ஒருவர் இருந்தார். "தோடி" சீதாராமய்யான்னு ஒருவர் இருந்தார். அப்போ... திரி புவனம் சுவாமிநாத அய்யர்ன்னு ஒருவர் இருந்தார்.

இவர் பார்த்தார். எந்த ராகத்தை எடுத்துக்கலாம் என்று யோசித்தார். "ஆனந்தபைரவி"யை எடுத்துக் கொண்டார். அதுலே ரொம்பவும் பெரிய "ஸ்பெஷலிஸ்ட்டா" ஆகிவிட்டார். பல பேரோட கவனம் அவர் பக்கம் திரும்ப ஆரம்பிச்சுது. ஒரு சமயம் ஒரு பொம்மலாட்ட கோஷ்டி, திருவையாறுக்கு வந்தது! அதோட, திரிபுவனம் சுவாமிநாத அய்யரும் வந்தார். பல நாள் அங்கே தங்கியிருந்து "பொம்மலாட்டம்" நடத்தினர். அதிலே இவர் "ஆனந்த பைரவி"யை தினமும் தவறாமல் பாடுவார். தியாகராஜ ருடைய சீடர்கள் சிலபேர் ·பொம்மலாட்டம் பார்க்க வந்திருக்கிறார்கள்! அவர்கள் இவரோட ராக ஆலா பனையிலே ரொம்பவும் லயிச்சிப் போய்விட்டார்கள்! அதுமட்டும் இல்லை! திரும்பிப்போனதும் தியாக ராஜரி டம் இந்த செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள்.


தியாகராஜர் உடனடியாக இதுக்கு பதில் எதுவும் சொல்லவில்லை! ஒரு நாள் தியாகராஜரே அங்கே நேரிலே போய் விட்டார். ஒரு இடத்திலே மறைவா நின்னு கவனித்தார். திரிபுவனம் சுவாமிநாதய்யர் ஆனந்தபைரவி ராக ஆலாபனையை ஆரம்பித்தார். உண்மையிலேயே அதை மெய்மறந்து கேட்டார் தியாகராஜர். ஆட்டம் முடிஞ்சவுடனே கூட்டத்துலே முண்டியடிச்சி மேடை அருகே போனார். தன்னுடைய பாராட்டைத் தெரிவிக்கிறதுக்காக! சங்கீத மகானே அங்கே வந்திருக்கிறதை பார்த்ததும் சபையிலே ஒரு சலசலப்பு. உடனே சுவாமிநாதய்யர் மேடை யிலே இருந்து கீழே குதித்தார். தியாகராஜர் காலிலே விழுந்தார் சுவாமி! தாங்கள் சபையிலே இருக்கிறபோது நான் ராக ஆலாபனை செய்ய முனைஞ்சது அதிகப் பிரசங்கித்தனம். என்னை மன்னிச்சிடுங்க" என்றார். தியாகராஜரோ "உங்களுடைய கச்சேரியைக் கேட்டுத் திருப்தியும் ஆனந்தமும் கொண்டேன் என்றார். கூட்ட த்திலே ஒரே கைத்தட்டல். ஆரவாரம். இந்த சமயத்திலே சுவாமிநாதய்யர் தயக்கத்துடன் ஆரம்பித்தார்.

"புலவர் பெருமானே! உங்களிடம் ஒரு வரம் வேண்டுகிறேன்!" என்றார். நீங்கள் கேட்பதற்கு முன்பாகவே கொடுக்கிறேன் என்றார் தியாகராஜர். அவர் சொன்னார்: "சுவாமி! நான் வேண்டுற வரம் இதுதான். இன்று முதல் ஆனந்த பைரவி ராகத்தில் பாடல் இயற்று வதை தாங்கள் நிறுத்தி விட வேண்டும். வருங்காலத்திலே தியாகராஜர் ஆனந்த பைரவியில் ஏன் அதிகமாக பாட்டு எழுதவில்லை என்ற கேள்வி எழும் போது... இப்பொழுது நடந்ததை சொல்லு வார்கள்! அதனாலே என்னோட. பேரும் தலைமுறை தலைமுறையா மக்கள் மனதிலே நிலைத்திருக்கும்!" என்றார். மக்கள் வாயடைத்து நின்றனர். ஆனால் தியாக ராஜர் ஒன்றும் அதிர்ச்சியடையவில்லை. முகத்திலே புன்னகை யோட அவர் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட தாக தலையை அசைத் தார். அன்றைக்கு கொடுத்த வாக்கை அப்படியே நிறை வேற்றினார் தியாக ராஜர்.

அதுக்கப்புறம் "ஆனந்தபைரவியிலே அவர் பாட்டு எழுதவே இல்லை! அது மட்டுமில்லை! ஏற்கனவே எழுதியிருந்த மூன்று பாடலையும் அதுக்குப் பிறகு புதுசா வந்த சீடர்களுக்கும் கற்பிக்கவே இல்லை! "ராம ராம நீ வாரமு" என்கிற திவ்ய ராமக்கீர்த்தனை. "கூர சாகர விஹார என்கிற உற்சவ சம்பிரதாய கீர்த்தனை, நீகே தெலியக" என்கிற கிருதி. இது மூன்றும் இந்த சம்பவம் நடக்கிறதுக்கு முன்பே கற்றுக்கொண்டு கையாண்டு வந்த சீடர்கள் வழியாகத்தான் இன்றைக்கு வழக்கத்திலே இருந்து கொண்டிருக்கிறது. இதை எதுக்குச் சொல்கிறேன் என்றால். பெரியவர்கள் எல்லாம் எப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலே கூட வாக்குகொடுத்திருக்கின்றனர். அதை எவ்வளவு உறுதியா காப்பாற்றியிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் தலைமையில் புதிய கூட்டணி ஏப்ரலில் வெளியாகவுள்ள அறிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் தேசிய அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கவனம் செலுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்காக எதிர்வரும் நாட்களில் பல கலந்துரையாடல்கள் இடம்பெற உள்ளதாக கூறப்படுகின்றது.

கலந்துரையாடல்களில் தேசிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கான கூட்டணி உருவாக்கப்பட உள்ளதாக வும் ஏப்ரல் மாதத்தில் இது தொடர்பிலான திட்டத்தை வெளியிட உள்ளதாகவும் தெரிய வருகிறது.

வடக்கில் தமிழ் கட்சிகள், மலையக அரசியல் கட்சிகள், பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் சில உறுப்பினர்களை கொண்டு இந்த கூட்டணியை அமைப்பதற்கான ஆலோசனைகள் நடத்தப்பட்டுள்ளன.

இந்தக் கூட்டணி உருவானதன் பின்னர் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வேட்பாளராக அறிவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பின்னர் பிரதமர் பதவியை கூட்டணியின் பலமான தலைவர் ஒருவருக்கு வழங்குவது தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட உள்ளதாகவும் தெரியவருகிறது. (நி)


# டெங்கு தொற்றுக்குள்ளாகும் சிறுவர்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த சில நாட்களாக காய்ச்சலுடன் வைத்தியசாலைக்கு வரும் சிறுவர்கள் டெங்கு தொற்றுக்குள்ளாகியுள்ளதாக லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

தற்போது சிறுவர்களிடையே டெங்கு கடுமையாக பரவி வருவதால் டெங்கு தொற்றுக்குள்ளாகும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# வெள்ளத்தில் மூழ்கிய புத்தளம் பழைய எலுவாங்குளம்



(புத்தளம்)

இராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டமையினால் புத்தளம் பழைய எலுவாங்குளம் முற்றாக நீரில் மூழ்கியுள்ளது.

நாட்டில் பெய்து வரும் மழையின் காரணமாக இராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டமையினால் புத்தளம் மன்னார் வீதியின் பழைய எலுவாங்குளம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

இதனால் பழைய எலுவாங்குளம் பிராதன வீதியிலிருந்து கலா ஓயா பாலம் வரை சுமார் மூன்று கிலோ மீற்றர் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் அவ்வீதியினூடான போக்குவரத்து முற்றாக தடைப்பெற்றுள்ளது.

அத்துடன் பழைய எலுவாங்குளம் தவுசமடு பகுதியில் வீடுகளுக்குள் வெள்ள நீர் உட்புகுந்துள்ளமையினால் அப்பகுதியிலுள்ள மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர்.

அத்துடன் பழைய எலுவாங்குளம் தவுசமடு பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வந்த 600 ஏக்கருக்கும் அதிகமான விவசாய நிலம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. (நி)

# போலித் தகவல் வழங்குவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர்




(கொழும்பு)

பொதுப்பாதுகாப்பு அமைச்சினால் ஸ்தாபிக்கப்பட்ட 118 என்ற பொலிஸ் துரித இலக்கத்துக்கு வழங்கப்படும் தகவல்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதன்படி, தேசிய பாதுகாப்பிற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அச்சுறுத்தல் ஏற்படுத்தக் கூடிய பயங்கரவாத மற்றும் தீவிரவாத செயற்பாடுகளையும் இந்த இலக்கத்திற்கு வழங்க முடியும்.

வழங்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணை சிறப்பு குழுவின் கீழ் இடம்பெறும்.

அதேநேரம், போலியான தகவல்களை வழங்கும் நபர்களுக்கு எதிராக சட்டம் அமுல்படுத்தப்படும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் சுட்டிக்காட்டினார். (நி)

# இராசிபலன்

14.01.2024
மார்கழி 29, ஞாயிற்றுக்கிழமை
திருதியை பிற்பகல் 12.32 மணிவரை

அவிட்டம் பிற்பகல் 2.49 மணிவரை
சுபநேரம் 9.34-11.04 மணிவரை
இராகுகாலம் 5.04-.6.34 மணிவரை
சதுர்த்தி விரதம்

சந்திராஷ்டமம்-
புனர்பூசம், பூசம்

வளவன்




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.




நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், எடுத்த காரியங்களில் தாமதம் ஏற்படலாம்.




கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், கோரிக்கைகளை நிறைவேற்ற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள்.




அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், பொது வாழ்வில் புகழ் கூடும், எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.




தொழில் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.




வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.




ஒரு சில வேலைகளை முடிக்க பல மணி நேரம் காத்திருக்க நேரிடலாம், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.




இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டல் பெருமை காண வேண்டிய நாள், பகை விலகி பாசம் கூடும்.




முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், கௌரவமான நாள்.




வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய தகவல் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கலாம், போசன சுகமுண்டு.




உறவினர்கள் உங்களின் நலனில் அக்கறை காட்டுவர், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

தூய மனம் உடையவன் எல்லாவற்றையும் தூயதாகவே காண்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு என்பது வளரக்கூடியது. ஞானம் நிலைத்து நின்று விடக்கூடியது.

– ஓர் அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தைப்பொங்கல் திருநாளில் மாணவர்களை அழைக்காதீர்கள்

நாளை தைப்பொங்கல். தைப்பொங்கல் என்றதும் அதற்குள் தமிழர்களின் நன்றி உணர்வு மேலெழும்.

ஆம், சூரியனுக்கு நன்றி பாராட்டும் வகையில் செய்வதே தைப்பொங்கல் என்று விளக்கம் தரப்படும்.

இதனையும் கடந்து தை மாதம் முதலாம் திகதி சூரிய பகவானுக்குப் பொங்கல் செய்து தைப்பிறப்பை வரவேற்கின்ற பண்பாடுதான் தைப்பொங்கல் என்ற விளக்கங்களும் உண்டு.

இப்போது அதுபற்றி நாம் பேசவில்லை.

மாறாக, தைப்பொங்கல் தொடர்பில் சான்றோர் பெருமக்கள் எத்தனை விளக்கங்கள் கொடுத்தாலும் அஃது பொருந்தும்.

ஆனால், தைப்பொங்கலின் உண்மையான நோக்கம் சூரியனுக்கு நன்றி செலுத்துவதினூடாகக் குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தி அவர்கள் எல்லோரும் சேர்ந்து பொங்கிப் படைத்து மகிழ்ந்திருப்பதாகும்.

கூடவே உறவுகளின் வீடுகளுக்குச் சென்று சமூக சுகத்தை ஏற்படுத்துவது. நன்றி என்பதன் தாற்பரியத்தை பிள்ளைகள் மற்றும் சிறுவர்களுக்கு செயலின் மூலம் உணர்த்துவது எனும் உயரிய நோக்கத்தை அடைவதற்காகவே தைப்பொங்கல் கொண்டாடப்படுகிறது.

எனினும் தைப்பொங்கல் திருநாளில் பொது நிகழ்வுகளை நடத்துகின்ற கலாசாரம் இப்போது அரங்கேறத் தலைப்பட்டுவிட்டது.

அதாவது தைப்பொங்கல் திருநாளின் மாலை வேளையில் ஒரு பொதுநிகழ்வை நடத்தும்போது அதில் குடும்ப உறுப்பினர்கள் ஒன்றாகச் சென்று பங்கேற்கும்போது அது மன ஆறுதலைத் தருவதோடு உழைப்பு உழைப்பு என்றும் படிப்பு படிப்பு என்றும் இருக்கக் கூடியவர்களை ஆற்றுப்படுத்துவதாகவும் இருக்கும்.

இதைவிடுத்து வீடுகள் தோறும் பொங்கல் செய்து குடும்ப உறுப்பினர்கள் எல்லோரும் ஒன்றாக நின்று சூரியகவானுக்குப் படையல் செய்து மனநிறைவடைகின்ற நேரத்தில், பொது நிகழ்வுகளை நடத்துவது அதில் மந்திரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்பது, அவர்களை வரவேற்பதற்காக மாணவர்களை அழைப்பது, அணிவகுப்பு மரியாதை வழங்குவது என்ற நிகழ்வுகளைச் செய்யும் போது, சம்பந்தப்பட்ட மாணவர்கள் தமது வீட்டில் பொங்கல் செய்து வழிபடுகின்ற அந்த அருமையான சந்தர்ப்பத்தை இழக்கின்றனர்.

இதுதவிர, மாணவர்களை ஏற்றி இறக்குவதில் பெற்றோர்கள் ஈடுபடுவதன் காரணமாக அந்த வீட்டில் பொங்கல் நிகழ்வு குழம்பிப் போகிறது.

ஆகையால் தைமாதம் முதலாம் திகதி காலைப்பொழுதில் இல்லங்கள் தோறும் நடைபெறுகின்ற தைப்பொங்கலின்போது பொது நிகழ்வுகள் இடம்பெறுவதைத் தவிர்ப்பதுடன் அந்த நிகழ்வுகளுக்கு மாணவர்களை அழைப்பதையும் முற்றுமுழுதாகத் தவிர்க்க வேண்டும்.

### உயர்தரப் பரீட்சை வினாத்தாள் கசிவு

## விசாரணைகளை ஆரம்பித்தது குற்றப்புலனாய்வு திணைக்களம்

உயர்தரப் பரீட்சையின் விவசாய விஞ்ஞானப் பாடத்தின் இரண்டாம் வினாத்தாள்கள் வெளியான சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

பரீட்சைக்கு முன்னதாகவே குறித்த வினாத்தாள் சமூக ஊடகங்களில் கசிந்ததாக வெளியான தகவலை அடுத்து மூன்று மொழிகளிலும் குறித்த பரீட்சை வினாத்தாள்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள பரீட்சைகள் திணைக்களம் குறித்த வினாத்தாளுக்கான பரீட்சை இடம்பெறவுள்ள புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தரவினால் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில்,

குறித்த வினாத்தாளின் கேள்விகள் மற்றொரு தாளில் கையால் எழுதப்பட்டு சமூக ஊடகங்களில் வெளியானமை ஆரம்ப கட்ட விசாரணைகளினூடாக தெரியவந்துள்ளது. (ம-7)

## முறையான அனுமதியின்றி இரசாயன இறக்குமதி

(கொழும்பு)

இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் பெரும்பாலான இரசாயனங்கள் எந்தவொரு அரச நிறுவனத்தினாலும் ஒழுங்குப்படுத்தப்படவில்லை என சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலையான அபிவிருத்திக்கான துறைசார் மேற்பார்வை குழு தெரிவித்துள்ளது.

சுற்றாடல் அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகார சபை உள்ளிட்ட பல நிறுவனங்கள் அந்த குழுவின் முன்னிலையில் அழைக்கப்பட்ட போதே இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையில் மாதாந்தம் சுமார் ஆயிரத்து 200 தொன் பிளாஸ்டிக் இறக்குமதி செய்யப்படுகின்ற போதிலும் குறைந்தளவான பிளாஸ்டிக் மாத்திரமே மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படுவதாகவும் அக் குழு குறிப்பிட்டுள்ளது. (ம-7)

### வவுனியாவில் கஞ்சாவுடன்

## குடும்பஸ்தர் கைது

வவுனியா, புளியங்குளம் பகுதியில் மோட்டர் சைக்கிள் ஒன்றின் இருக்கைக்குள் மறைத்து கொண்டு செல்லப்பட்ட கஞ்சாவுடன் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, புளியங்குளம் பகுதியில் விசேட அதிரடிப் படையினர் மோட்டார் சைக்கிளில் ஏ9 வீதி ஊடாக பொல்கா வலை நோக்கி பயணித்த குடும்பஸ்தரை மறித்து சோதனை செய்தனர்.

இதன்போது, மோட்டார் சைக்கிள் இருக்கைப் பகுதிக்குள் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு கிலோ 375 கிராம் கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து கஞ்சா மீட்கப்பட்டதுடன், குறித்த குடும்பஸ்தரும் அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு புளியங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ம-7,250)

# பரமபிதா காட்டிய பாதை

### சொகுசான வாழ்வைத் தேடி, சுகத்தைநாடி. ஓடினால் சுகவீனமாய்ப் போவோம்

எமக்குத்தரப்படும் பைபிள்ப் பகுதி யோவான் நற்செய்தி 1:35-42 இருந்து எடுக்கப்பட்டு திருமுழுக்கு யோவனின் வாழ்வைப் பற்றி கூறுகின்றது. இதுவரை மக்கள் மத்தியில் அவர் பெற்றிருந்த செல்வாக்கு, இறைவாக்கினர் என்று மக்கள் மதித்த பாங்கு, அதிகாரவர்க்கத்தினருக்கு அவர் விடுத்த சவால், இவையனைத்தையும், ஒரு நொடியில் இழப்பதற்குத் அவர் தயாராகிறார். தன்னை மெசியா என்று மக்கள் நினைத்திருந்தாலும், அந்த நினைப்பை தனது சுயநலத்திற்காக அவர் என்றுமே பயன்படுத்த முயலவில்லை.

தன்னுடைய சீடர்கள் இயேசுவில் நம்பிக்கை வைக்கவேண்டும் என்ற அவரது எண்ணத்தின் வெளிப்பாடுதான், இன்றைய பைபிள்ப்பகுதி அவர்களின் தேடல் அவரில் அல்ல, மாறாக, இயேசுவில்தான் நிறைவு பெறப்போகிறது என்பதை அவர் தன்னுடைய சீடர்களுக்குக் கற்றுத்தருகிறார். அதற்காக அவர் வருந்தியது இல்லை. தனது புகழ் முடிந்துவிட்டதே என்று, வருத்தப்படவும் இல்லை. இயேசுவை இந்த உலகத்திற்கு முழுமையாக அடையாளம் காட்டுகிறார்.

ஒருவரோடு தங்கியிருத்தல் என்பது பல அனுபவங்களைப் பெற வழிவகுக்கும். இயேசுவோடு தங்கியிருந்து அவரது அன்பையும், ஆற்றல்மிகு வாக்குகளையும் சுவைக்கும் அனுபவம் பெற்ற அந்திரேயா தமது சகோதரர் சீமோனிடம் வந்து சொன்ன நற்செய்தி "மெசியாவைக் கண்டோம்" என்பது. இன்று வாழ்வு மாற்றம் நிகழ்த்தும் தியானக்கூட்டங்களில் கலந்துகொண்டு பயன்பெற்ற பலரும் திரும்பி வந்து, அயலாரை அழைத்து, "நீங்களும் அந்த தியானத்தில் கலந்துகொள்ளுங்கள்" என்று ஊக்கமூட்டும் நிகழ்வுகள் அவ்வப்போது எம் நடுவே நடைபெறுகின்றன. ஆனால், கிறிஸ்துவை பின்பற்றும் பலர் "மெசியாவைக் கண்டோம்" என்று பிறரிடம் ஆர்வத்துடன் சொல்ல இயலுவதில்லை, காரணம் இந்த "மெசியா அனுபவம்" அவர்களுக்குக் கிடைப்பதில்லை. தியானங்கள், திருப்பயணங்கள், குணமளிக்கும் நிகழ்வுகள், நற்செய்திக் கூட்டங்கள், அறப்பணி சேவைகள், இப்படி ஏதாவது ஒரு வகையில் நாம் அனைவரும் "மெசியா அனுபவம்" பெறவேண்டும்.

ஒரு சீடனின் வாழ்க்கைமுறை எப்படி அமைய வேண்டும் என்பதைப்பற்றி திருமுழுக்கு யோவான் விளங்கப்படுத்கிறார். இயேசுவின் அழைத்தல் தூய அந்திரேயாவுக்கு கலிலேயக் கடலிலே கிடைத்தது. அங்குதான் அந்திரேயாவும் அவர் சகோதரர் பேதுருவும் தங்களது மீன் பிடிக்கும் தொழிலிலே ஈடுபட்டிருந்தார்கள் ஏனெனில் அவர்கள் மீனவர்கள். அந்திரேயா யோனாவின் மூத்த மகன். இயேசுவின் பன்னிரு சீடர்களில் ஒருவரான இவர் குறிப்பாக திருமுழுக்கு யோவானின் சீடராவார்.

எதைப் பின்பற்றுகிறோம் என்பதில் மிகக்கவனமுடன் இருக்கவேண்டும். முக்கியமாக இயேசுவின் சீடனாக அழைக்கப்பட்ட அனைவருக்கும் மாயவலைகள் பரந்து விரிந்து கிடக்கின்றன இவற்றில் சிக்கிக் கொள்ளாமல் இருப்பதற்கு இறைவன் அழைத்த பாதையை பின்பற்ற வேண்டும். இயேசுவை பின்பற்ற ஆரம்பித்து விட்டால் அந்திரேயாவைப்போல வெறுமையிலும் வறுமையிலும் பொறுமையாய்ப் பொறுப்புடன் வாழக் கற்றுக் கொள்ளவேண்டும். சொகுசான வாழ்வைத் தேடி, சுகத்தைநாடி. அதன்பின்னே ஓடி. இறுதியில் சுகவீனமாய். பலவீனமாய். பரிதாபமாய், விரக்தியடைந்து வீணாய்ப் போய் விடுகின்றோம். பின்பற்ற வேண்டியவற்றைப் புறம்தள்ளிவிட்டு பின்பற்றத் தகாததைப் பிரதானமாய்ப் பின்பற்றி புண்பட்ட நெஞ்சத்தினராய் நாம் அனைவரும் புறம்பே தள்ளப்படுவதுதான் இன்றைய யதார்த்தம்.

மயக்கும் மாயாஜாலம் மந்திர வலைகளுக்குள் மட்டுமே மயங்கி விழுந்து விடுகிறோம். அதுவே பூரணதிருப்தி என்று பரிபூரணமாய் நம்பி விடுகின்றோம். அன்று அந்திரேயா இயேசுவைப் பின் தொடர்ந்தது இன்று நமக்கு ஒரு சிறந்த பாடமாக இருக்கின்றது. "என் பின்னே வாருங்கள்" என்று இயேசு கூறியது எமது உள்ளங்களிலும் ஒலிக்க வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவனு(ளு)ம் கிறிஸ்துவைப் பின்பற்ற அழைக்கப்பட்டுள்ளா(ள்)ன். ஆனால் அழைத்தலை ஏற்றவர்கள் அனுபவம் பெற தயக்கம் கொள்கிறார்கள். உண்மையான சீடனாக இயேசுவைப் பின்பற்றுவோம்.

**ம.பிரான்சிஸ்க்,**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜயன்கன்குளம் மருத்துவமனைக்கென அம்புலன்ஸ் வண்டி இல்லை

## நடவடிக்கை எடுக்குமாறு கிராம மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஜயன்கன் குளம் மருத்துவமனையில் அம்புலன்ஸ் வண்டி இல்லாததால் நோயாளர்கள் கடும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.


அம்புலன் வண்டி இல்லாததன் காரணமாக 12 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மல்லாவி ஆதார மருத்துவ மனைக்கு அவசர நோயாளர்களைக் கொண்டு செல்ல முடியாத நிலைமை உள்ளது.

ஜயன்கன்குளம் ,புத்து வெட்டுவான் ,பழைய முறிகண்டி கோட்டை கட்டியகுளம் ஆகிய கிராமங்களில் உள்ள மக்கள் இவ் மருத்துவமனையை நம்பியுள்ளனர்.

மேற்படி கிராமங்களின் மக்களின் நலன்கருதி ஜயன் கன்குளம் மருத்துவமனையில் தரித்து நின்று சேவை வழங்கக் கூடிய வகையில் அம்புலன்ஸ் ஒன்றினை பணியில் ஈடுபடுத்துமாறு அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த காலங்களில் இக் கோரிக்கை பல தடவைகள் விடுக்கப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர். (நி-350)

# கோழி இறைச்சி விலை மன்னாரில் சடுதியாக குறைவடைந்தது



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் இறைச்சி மற்றும் முட்டைக் கோழிகளின் விலைகள் சடுதியாக குறைந்துள்ளதாக கோழி இறைச்சி விற்பனை நிலைய உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாடளாவிய ரீதியில் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அதிகரித்துவரும் நிலையில் குறிப்பாக மீன் மற்றும் மரக்கறிகளின் விலை உச்சம் தொட்டுள்ளது.

இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் இறைச்சிக் கோழி மற்றும் முட்டைக் கோழி விலை குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக ஒரு கிலோ இறைச்சிக் கோழி 1,360 ரூபாவாகவும் முட்டைக் கோழி ஒரு கிலோ 1,100 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இறைச்சிக் கோழிக்கான விற்பனை விலை அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்படாத நிலையில் ஏனைய மாவட்டங்களில் 1,450 -1,500 ரூபா வரையில் கோழி இறைச்சி விற்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-285)

# மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் 4 டிப்பர்களுடன் சாரதிகளும் கைது

(தருமபுரம்)



தருமபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாறு மற்றும் பிரமந்தனாறு பகுதியில் நேற்றைய தினம் அனுமதி பத்திரத்திற்கு முரணான வகையில் வேறு பகுதியில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் நான்கு டிப்பர்களும் அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டனர்.

தருமபுர பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக வீதி சோதனையின் மூலம் கைது செய்யப்பட்டுள்ளனர்.கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் தடயப் பொருட்களை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி எம் சதுரங்க தெரிவித்துள்ளார். (நி-316)

# காலபோக அறுவடை ஆரம்பம்


(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தின் பெரும்போக நெற்செய்கை அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இம்முறை இரண்டு தடவைகள் நோய் தாக்கம் ஏற்பட்டதாகவும் பின்னர் காலநிலை மாற்றம் காரணமாகவும் மழை வெள்ளம் பேரழிவை ஏற்படுத்தியதன் காரணமாக இம்முறை பெரும் போக அறுவடையில் பாரிய வீழ்ச்சி கண்டுள்ளதாகவும் இதன் காரணமாக தமது வாழ்வாதாரம் மிக அதிகமாக பாதிக்கப்படுவதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகள் பல தடவைகள் தமக்கு இயற்கை அனர்த்தங்களினால் இழப்புகள் ஏற்பட்டிருந்த போதிலும் அரச தரப்பினர்களால் உரிய இழப்பீடு கிடைக்க வில்லை எனவும் தெரிவித்தனர். (நி-316)

# சேதமடைந்த பாலத்தால் போக்குவரத்து பாதிப்பு



(நெளுக்குளம்)

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் பல மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு ஆறு மாத காலத்திற்குள்ளேயே சேதமடைந்துள்ள நிலையில் ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களின் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருப்பதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி பரந்தன் ஏ-9 வீதியில் இருந்து மாட்டுப்பட்டி தெரு மயான வீதியினைக் குறுகறுத்துச் செல்லும் ஆற்றுக்கான பாலம் பல மில்லியன் ரூபா செலவில் 2018 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது.

இப்பாலம் நிர்மாணிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து விடப்பட்ட நிலையில் குறித்த பாலத்தின் ஒரு பகுதி முழுமையாக உடைந்துள்ளதுடன் ஏனைய பகுதிகளும் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றன.

இதனால் பரந்தன் சிவபுரம் மற்றும் கிராமவிஸ்தரிப்பு திட்டம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-315)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 900 | 850 | 550 | 800 |
| உருளைக்கிழங்கு | 160 | 180 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 1000 | 1000 | 1200 | 1200 |
| தக்காளி | 550 | 650 | 500 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 120 | 150 | 150 |
| கோவா | 500 | 550 | 550 | 800 |
| கரட் | 1200 | 1200 | 1200 | 1500 |
| பூசணி | 120 | 150 | 150 | 200 |
| புடோல் | 350 | 300 | 250 | 250 |
| வாழைக்காய் | 250 | 240 | 200 | 250 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 450 | 400 |
| பெரிய வெங்காயம் | 420 | 450 | 450 | 500 |
| பாகற்காய் | 800 | 800 | 800 | 1000 |
| வெண்டக்காய் | 350 | 400 | 240 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 200 |
| பயற்றங்காய் | 600 | 800 | 500 | 800 |
| லீக்ஸ் | 450 | 450 | 450 | 600 |
| பீற்றூட் | 800 | 800 | 400 | 800 |
| கறிமிளகாய் | 600 | 600 | 800 | 1000 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | 3000 |
| போஞ்சி | 600 | 600 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 800 | 700 | 600 | 700 |
| கீரை - 1 பிடி | 160 | 160 | 180 | 200 |
| தேசிக்காய் | 300 | 300 | 300 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 850 | 700 | 550 | 500 |
| வெங்காயப்பூ | 650 | 800 | -- | 1000 |
| முள்ளங்கி | 180 | 300 | 300 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 180(கட்டு) | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 100 | 150 | 160 |



ஊடகவியலாளர் மு.தமிழ்ச்செல்வனின் நஞ்சாகும் நிலம் சூழலியல் கட்டுரைகளின் தொகுப்பு நூல் வெளியீடு கிளிநொச்சி மாவட்ட செயலகத்திறன் விருத்தி மண்டபத்தில் நேற்று சிறப்பாக இடம் பெற்றது. (படம்-தேவானந்தன்)

# இரணைமடுக் குளத்தின் பொங்கல் விழா

(அக்கராயன்)

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் 104 ஆம் வருட பொங்கல் விழா எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு கனகாம்பிகைக்குளம் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இரணை மடு கமக்கார அமைப்புகளின் சம்மேளனத்தின் தலைவர் வி.நடராசா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (நி-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சியில்...

பல்வேறு பகுதிகளிலும் பல பொருட்கள் கரையொதுங்கி வருகின்றன.

அண்மையில் புத்த பெருமான்அமர்ந்திருக்கக்கூடிய தேர் மிதப்புகள், உட்பட பல்வேறு பொருட்கள் அதிகளவில் கரையொதுங்கியுள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (ம-7,33,60)

## வெற்றிலைக்...

யோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் பணியாற்றும் வெற்றிலைக்கேணி முள்ளியானைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 31வயதுடைய அன்ரன் பிலிப்பின் தாஸ் என்பவரே உயிரிழந்துள்ளார்.

பணி முடித்து வீடு திரும்பிச் சென்று கொண்டிருக்கும் வேளை இரவு 10.00 மணியளவில் மருதங்கேணி நோக்கி சென்று கொண்டிருந்த இராணுவ உழவு இயந்திரத்துடன் மோட்டார் சைக்கிள் மோதியே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பாக மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ம-7,33,60)

## பால் பைக்கற்...

தலைவர் அசேல சம்பத் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி, யோகட் ஒன்றின் விலை 10 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பால் பைக்கற் ஒன்றின் விலை 40 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அசேல சம்பத் தெரிவித்துள்ளார். (ம-7)

## வயதான...

இலங்கையின் வயதான நபராக கருதப்படும் கொட்டாச்சி நந்தியாஸ் 110ஆவது வயதில் நேற்று முன்தினம் காலமானார்.

நாகொட, கப்பிட்டியாகொடையை வசிப்பிடமாகக் கொண்ட மாகல கொட்டாச்சி நந்தியாஸ் 1914ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3ஆம் திகதி பிறந்தார்.

இவரை தேசிய முதியோர் செயலகம் நாட்டிலேயே மிகவும் வயதானவர் என்று அறிவித்திருந்தது.

இந்நிலையில் கொட்டாச்சி நந்தியாஸ் நேற்று முன்தினம் காலமானார்.

இவரது இறுதி கிரியைகள் நேற்று பத்தேகம மயானத்தில் இடம்பெற்றது. (ம-7)

## கடும் பொருளா...

குத் தள்ளியுள்ளது.

இலங்கையின் உயர்கல்வித் துறையைப் பொறுத்தமட்டில், 2023இல் சுமார் 900 பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறினர்.

இதனால், தற்போது விரிவுரையாளர்கள் மத்தியில் 50 சதவீத வெற்றிடம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 155,000 பல்கலைக்கழக மாணவர் தொகையினை கருத்தில் கொண்டு, இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு உகந்த முறையில் இயங்குவதற்கு சுமார் 13,000 விரிவுரையாளர்கள் தேவைப்படுகின்றனர்.

எனினும், தற்போது 6,500 விரிவுரையாளர்கள் மாத்திரமே பல்கலைக் கழகங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளமையினால், உயர்கல்வித் துறையானது பெரும் நெருக்கடியினை சந்தித்துள்ளது.

மேலும் 1700 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதால் மருத்துவத்துறையிலும் பாரிய நெருக்கடி தோன்றியுள்ளது. (ம-7)

## வாகனங்கள்...

குறித்த இந்த முறையைப் பயன்படுத்தி பொது தேவைகளுக்காக வாகனங்களை இறக்குமதி செய்ய முடியாது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுக்கு SUV வாகனம், சுகாதார அமைச்சுக்கு 21 வண்டிகள், கல்வி அமைச்சுக்கு இரண்டு பேருந்துகள் இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ம-7)

## யுக்திய...

பொறுப்பான அதிகாரிகள், மாவட்டங்களுக்கு பொறுப்பான அதிகாரிகள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் மற்றும் குற்றப்புலனாய்வு பொறுப்பதிகாரிகள் ஆகியோருக்கு இந்த விசேட அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 42,248 பேரின் பட்டியல் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

யுக்திய செயற்றிட்டத்தின் கீழ் எதிர்வரும் ஒரு மாதத்திற்குள் தமது பொலிஸ் பிரிவை உள்ளடக்கிய வகையில் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு, பட்டியலிடப்பட்டுள்ள சந்தேகநபர்களைக் கைது செய்வதற்காக அனைத்து குற்றப்புலனாய்வு அதிகாரிகளையும் 24 மணித்தியால சேவையில் ஈடுபடுத்துமாறு பதில் பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

இதனிடையே, யுக்திய சுற்றிவளைப்பின்போது நாட்டில் காணப்படும் சட்டக் கட்டமைப்பிற்குள், சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்திற்கு அமைய செயற்படுமாறு, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால், பதில் பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-7)

## பருத்...

தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் டெங்கு நோய் காரணமாக அனுமதிக்கப்பட்டிருந்த மாணவி ஒருவர் நேற்றைய தினம் பரீட்சைக்கு தோற்ற வேண்டிய நிலைமையில் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்படாத காரணத்தினால் மருத்துவக் கண்காணிப்பில் பரீட்சைக்கு தோற்றுவதற்கு மருத்துவமனை தரப்பில் ஒத்துழைப்பு வழங்கப்பட்டிருந்தது.

குறுகிய நேர விடுப்பு அடிப்படையில் மருத்துவமனையில் இருந்து அவசர நோயாளர் காவு வாகனத்தின் மூலமாக பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்நிலை பாடசாலையில் கல்வி கற்று வந்த மாணவி பரீட்சை நிலையத்துக்கு காலை அழைத்து செல்லப்பட்டு மருத்துவ தாதியின் கண்காணிப்பில் பரீட்சைக்கு தோற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.(ம-7)

## ரணில்...

டிசம்பர் 17ஆம் திகதிக்கு பின்னர் 29000 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் சிலர் சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர் மோசமாக நடத்தப்பட்டுள்ளனர் என குற்றச்சாட்டுகள் வெளியாகியுள்ளன.

இவ்வாறான நடவடிக்கைகளின் போது மக்கள் பல்வேறு மீறல்களிற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர், அனுமதியற்ற தேடுதல்கள் கண்மூடித்தனமான கைதுகள் தடுத்துவைத்தல் மோசமாக நடத்துதல் சித்திரவதை பொதுஇடங்களில் ஆடைகளை களைந்து சோதனை போன்றன இடம்பெறுகின்றன என தெரிவித்துள்ள ஐநாவின் மனித உரிமை ஆணையாளர் பாதிக்கப்பட்டவர்களின் சட்டத்தரணிகள் தாங்கள் பொலிஸாரிடமிருந்து அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்எனவும்அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கம் தனது யுக்திய நடவடிக்கையை மறுஆய்விற்கு உட்படுத்தவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் வோல்க்கர் டேர்க் மனித உரிமையை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையை பின்பற்றுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-7)


லக்கி 7 VIP
திகதி 2024.01.13
சீட்டிழுப்பு இலக்கம் 0184
Z 3 2 8 8 9 6 Z

தன நிதானய
திகதி - 2024.01.13
சீட்டிழுப்பு இலக்கம் - 1388
W 16 32 60 78 W
46144

கோவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3600
சீட்டிழுப்பு திகதி 13.01.2024
O 19 25 44 52
O 44753

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.01.13
சீட்டிழுப்பு இலக்கம் 0667
மிதுனம் 07 45 54 58 மிதுனம்
57177 12

மஹஜன சம்பத
திகதி 2024/01/13
சீட்டிழுப்பு இலக்கம் 5358
H 2 4 7 4 0 7

மெகா பவர்
திகதி 13/01/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1706
D 15 26 29 35 62
31795

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2332 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.01.13 தினம் சனிக்கிழமை
62 67 69 73 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 66,795,842.40
89438

சனிதா
திகதி 2024.01.13 வெற்றி வாரம் 4493
14 34 37 54 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 69,931,924.40
53804

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4044 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.01.13 தினம் சனிக்கிழமை
24 34 35 36 கடகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,000,000.00
269306

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
S 17 08 13 22 28
சீட்டிழுப்பு வாரம் 1508 சிவப்பு 13.01.2024 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 492,037,596.20

சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2158
சீட்டிழுப்பு திகதி : 2024.01.13
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 83,321,234.40
ADA KOTIPATHI
11 27 34 45 U
599238

உத்தியோகபூர்வ முடிவுகள்
13.01.2024 வெற்றி வாரம் 066 வர்ணம் நீலம்
W 0 3 5 9 6 5
47882
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 26,305,907.20
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார், வான் விற்பனைக்கு

17 - XXXX நிசான், சனி வாகன் மொடல் கார் மற்றும் GN - XXXX நிசான் செரினா ஆகிய வாகனங்கள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

**076 748 3028**
**077 255 7761**

(18572)

## சமையலாளர் தேவை

கொழும்பில் ஆரம்பிக்கவுள்ள புதிய உணவகத்திற்கு யாழ்ப்பாண முறையில் நண்டு, இறால், கணவாய், கோழி போன்ற அனைத்து வகையான அசைவ உணவுகளும் சமைக்கத் தெரிந்த சமையலாளர்கள் தேவை.

(18619)

**077 721 7419**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**076 636 3378**
**076 097 3127**

## விமலம் திருமண சேவை

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன், மணமகள் தேவையெனில் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். உள்நாட்டு/ வெளிநாட்டு மணமகன், மணமகள் தாராளமாக உள்ளன.

**+14372446737**
கனடா **+16476571347**
**077 240 9276**

(18521)

## காணி விற்பனைக்கு

**நிலப்பரப்பு**

யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் பருத்தித்துறை வீதி பிரதான முகப்புடன் அமைந்துள்ள 4 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

(18604)

**077 077 4919**

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH 30% *Special offer for all the courses*

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

(18230)

**T.P : 077 780 3970, 074 007 1970**

## பணிப்பெண் தேவை

45 வயது சுகவீனமுடைய ஒருவரை பராமரிப்பதற்கு பெண் வேலையாட்கள் தேவை.

(18611)

**075 753 3456**

## சுய தொழில் வாய்ப்பு
## உணவு விற்பனை

காலை 6.30 மணிமுதல் மாலை வரை தரமான உணவு, சிற்றுண்டிகள் தரப்படும். தனியார் வீடுகள், கடைகள், சிற்றுண்டிச்சாலைகள் (CANTEEN) என யாவரையும் வரவேற்கின்றோம்.
( நல்ல இலாபம் தரப்படும் )

**யாழ் பாடி**
**51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

(C-8130)

**+94 21 222 6868**
**+94 777 340 026**



## கொழும்பு மற்றும் யாழிலிருந்து

மூன்று ஈஸ்வரங்களின் புண்ணிய தல யாத்திரை
**(இரு நாட்கள் ஒரு இரவு பயணம்)**

- திருக்கேஸ்தீஸ்வரம்
- முன்னேஸ்வரம்
- இராமலிங்கேஸ்வரம்
- சின்னகதிர்காமம்
- திரௌபதி அம்மன் உடப்பு

**ரூபாய் 12,000.00**


(C-8130)

(தனிநபருக்கு பயணம் மற்றும் தங்குமிடம் உள்ளடங்கலாக. உணவு அடியார்கள் விருப்பத்தில்)
மானாவரி இராமலிங்கேஸ்வரத்தில் இரண்டாம் நாள் காலை பொங்கல் வழங்கப்படும்.

**அஷோகவட்டிகா சுற்றுலா**
**ASHOKAVATIKA HOLIDAYS**

+9477 736 0353, +9475 020 2802, +9477 968 0026
ashokavatika@gmail.com

## துரித பொதிகள் சேவை



- சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
- **அவுஸ்திரேலியா விசேட சலுகை** உணவுப்பொருட்கள், மருந்து, எண்ணெய் வகைகள் என்பன எம் ஊடாக அனுப்பிட முடியும்.
- ஏனைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள் உண்டு.

**திருமுருகன் பொதிகள் சேவை**
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.

**0777 554 528** (18578)

## SB TRAVELS AND TOURS PVT LTD.

No.198, Kasthuriyar Road, Jaffna.

**விசாக்கள்** **ரிக்கெட்டுக்கள்**

**Malaysia, Dubai, Thailand, China, Vietnam, India E-Visa**

நாடுகளுக்கான விசாக்களும் மற்றும் சகல நாடுகளுக்குமான விமான ரிக்கெட்டுக்களை மிக குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**Hotline : 075 555 9932**
**Tel : 021 222 8555**
**Jaffna : 076 691 1082, 83, 89**
**Colombo : 077 108 3482, 83**
Email : sbtravelsjaffna@gmail.com

(C-8131)

## காணி விற்பனைக்கு

**நல்லூர் கோவிலில் இருந்து 2Km தூரத்தில் 02 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- பிரதான இராச பாதையும் G.P.S விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- திருமண மண்டபங்கள், அனைத்து விதமான வியாபார நிலையங்கள், வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று.

பார்வையிடும் நேரம் : காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை

(18604)

**தொடர்புகளுக்கு : ஜெயம்**
**077 814 7389, 077 986 5457**

## இராஜ மருத்துவம்

குழந்தைகள் கிரந்தி, அவியல், சளி, இருமல், செவ்வாப்பு, கிரந்தி முட்டு கணை நோய்களுக்கும் குளோகோமா, சூதக வலி, ஆனந்த வாயுவுக்கும் சிகிச்சை பெறவும், கோறோசனை மாத்திரை, கிரந்தி எண்ணெய் பெற்றுக் கொள்ளவும்

பேரறிஞர் **Dr.K.பாலசுப்பிரமணியம்**
சிறப்பு ஆலோசகர்

(C-8129)

**076 274 4488** வல்லை வீதி, சங்கானை.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த 22.11.2023 புதன்கிழமை சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற நீதிபதி **A.யூட்சன்** அவர்களின் முன்னிலையில் **அகில இலங்கை சமாதான நீதிவானாகப்** பதவி ஏற்ற

திரு. **மகாலிங்கம் விவேகானந்தன்**

அவர்களின் சேவை சிறக்கப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

BEST WISHES

(18606)

வாழ்த்துவோர்:
" மயூரம் "
ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்.
திரு. அ.திருநாவுக்கரசு குடும்பம்

## Happy Supermarket - உரும்பிராய்

**உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...**

| | | | |
|---|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - | 269 /= | Max 2Kg |
| 1 Kg தீட்டல் பச்சை அரிசி | - | 165 /= | Max 5Kg |
| 1 Kg சர்க்கரை | - | 305 /= | |
| 1 Kg அரிசி மா | - | 200 /= | |
| 1 Kg றவை | - | 289 /= | |
| 1 Kg கோதுமை மா | - | 183 /= | |
| 1 Kg Prima கோதுமை | - | 189 /= | |
| 1 Kg சம்பா அரிசி | - | 230 /= | Max 3Kg |
| 100g கற்கண்டு | - | 34 /= | |
| 100g பிளம்ஸ் | - | 125 /= | |
| 1 மங்களம் ஊதுபத்தி | - | 150 /= | ~~200 /=~~ |
| 1 Kg Sunlight Rose பவுடர் | - | 369 /= | ~~430 /=~~ |
| 70g Baby Soap | - | 112 /= | ~~145 /=~~ |
| 180g Protinex புரோடினக்ஸ் | - | 1699 /= | ~~1957 /=~~ |
| 400g sustagen சஸ்ரயன் | - | 3435 /= | ~~3900 /=~~ |

1028/=



~~1080/=~~

(18624)

**யோக்கட் மொத்த கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்**
தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

**பலாலி வீதி,**
**உரும்பிராய் சந்தி.**

Happy Supermarket
0777 8080 30

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org